விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 08 செவ்வாய்க்கிழமை (22.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 093

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## புலிகளுக்கு உயிரூட்ட பிரதமர் முயற்சிக்கிறார்

### ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதமர் டி.எம்.ஜயரட்ண தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உயிரூட்ட முயற்சித்து வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் பிரதமர் அடிப்படையற்ற தகவல்களை அண்மையில் வெளியிட்டுள்ளதாக கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட புலிகளுக்கு பிரதமர் (20ஆம் பக்கம் பார்க்க)



லிபிய அதிபர் கேணல் கடாபியின் வளாகத்தில் நேற்று ஐ.நா கூட்டுப்படையால் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் சேதமடைந்த கட்டடத் தொகுதியினையும் தாக்குதல் நடத்திய பிரான்ஸ் விமானத்தையும் படத்தில் காணலாம்.

# அரசுக்கு மக்கள் அங்கீகாரம் சர்வதேசத்திற்கு புரிய வேண்டும்

### தேர்தல் முடிபு குறித்து அமைச்சர் சமரசிங்க விளக்கம்

(கொழும்பு)

**யுத்தத்திற்குப் பின்னர் அரசாங்கம் மேற்கொண்டுவரும் வேலைத்திட்டங்களுக்கு மக்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளனர் என்பதனை சர்வதேசம் புரிந்துகொள்ளவேண்டும் என மனித உரிமைகள் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.**

இடம்பெற்றுமுடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிபுகளின் மூலம் நாட்டு மக்கள் சர்வதேசத்திற்கு சிறந்த செய்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தாலும் மக்கள் அரசாங்கத்தின் மீது பாரிய நம்பிக்கை வைத்துள்ளனர். மக்களின் நம்பிக்கை மீண்டும் (20ஆம் பக்கம் பார்க்க)



## 'கடாபி இலக்கு அல்ல' மேற்குலக நாடுகள் கருத்து

(பாரிஸ்)

லிபியாவுக்கு எதிரான தாக்குதலின் போது கேணல் கடாபியை இலக்குவைப்பது தமது நோக்கமல்ல என்று ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை லிபியாவின் மீது அமுல்படுத்த விளையும் மேற்கத்தைய நாடுகள் கூறுகின்றன.

அத்தகைய நகர்வு ஒரு புத்திசாலித்தனமான முடிபாக இருக்காது என்று அமெரிக்க பாதுகாப்புச் செயலர் றொபர்ட் கேட்ஸ் கூறியுள்ளார்.

கேணல் கடாபியின் சரியான தங்குமிடம் தெரிந்தாலும் கூட அவர் மீது சுடப்படமாட்டாது என்றும் பிரான்ஸ் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் தீர்மானத்தின் கீழ் லிபியத் தலைவரை தாக்குவது அனுமதிக்கப்படவில்லை என்று பிரிட்டிஷ் படைகளின் தலைமை அதிகாரியான சர் டேவிட் றிச்சர்ட்ஸ் கூறியுள்ளார்.

ஆனால் டேவிட் றிச்சர்ட்ஸின் கருத்து தவறானது என்று அரசாங்க அமைச்சர்கள் கருதுவதாக பிரிட்டிஷ் அரசாங்கத் தகவல்கள் தெரிவித்துள் (20ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலின் விலை விரைவில் அதிகரிக்கும்!

(கொழும்பு)

பெற்றோலியப் பொருட்களின் விலைகளை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

மேற்கத்தேய நாடுகள் லிபியாவில் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து நேற்று சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை 02 டொலர்கள் அதிகரித்தது.

இந்நிலையில் எதிர்வரும் நாட்களில் தொடர்ந்தும் இதற்கான விலை அதிகரிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை இலங்கையில் அதிக அளவிலான நிதி மோசடிகளினால், அரசாங்கம் ஏற்கெனவே பெற்றோல் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் தீர்மானத்தில் இருந்தது.

எனினும் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தல் (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன? த ஹிந்து தகவல்

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுவந்த கடும் அழுத்தங்கள் காரணமாகவே, இந்தியா இவ் விவகாரத்தில் தலையிடுவதில்லை என தான் மேற்கொண்டிருந்த உறுதியான தீர்மானத்தை மீளாய்வு செய்யும் முடிபை எடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

விக்கிலீக்ஸினால் வெளியிடப்பட்ட தகவற் குறிப்புக்களின் அடிப்படையில் வெளியாகியுள்ள இச்செய்தியை இந்தியாவிலிருந்து வெளியாகும் த ஹிந்து பத்திரிகை வெளியிட்டுள்ளது. இது குறித்து இப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2005ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தினால் இராஜாங்கத் திணைக்களத்துக்குதகவற்குறிப்புஒன்றுஅனுப்பப்பட்டிருந்தது. இலங்கையின் சமாதான முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், முன்னொருபோதும் இல்லாதவகையில் எதிர்வுகூற முடியாதவராக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இருப்பதாகவும் இத் தகவற் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இச் சமாதான முயற்சிகள் தொடர்பில்நோர்வேதனது கட்டுப்பாட்டை இழந்து விட்டதாக புதுடில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் பிரதிச் (20ஆம் பக்கம் பார்க்க)

## பார்வதி அம்மாளின் அஸ்தி வங்கக்கடலில் இன்று கரைப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் அஸ்தி வங்கக் கடலில் கரைக்கும் நிகழ்வு பழ. நெடுமாறன் தலைமையில் இன்று இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கலந்துகொள்வதுடன் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் கூட்டத்திற்கும் அவர் தலைமை தாங்கவுள்ளார்.

இது தொடர்பாக மதிமுக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகெங்கும் வாழும் தமிழர்கள் நெஞ்சத்தில் போற்றிடும் அன்னை பார்வதி அம்மையார் மறைந்த 31-வது நாளாகிய இன்று தரணியில் தமிழர் வாழும் இடங்கள் அனைத்திலும் அன்னையாரின் அந்தியேட்டி நினைவு அஞ்சலி நிகழ்ச்சி நடைபெறுகிறது.

தலைமைதாங்கி (20ஆம் பக்கம் பார்க்க)

## எரிந்த நிலையில் பெண்ணின் சடலம்

(சாவகச்சேரி)

மீசாலை தெற்குப் பகுதியிலுள்ள பழைய வீடொன்றிலிருந்து நேற்றைய தினம் பி.ப. 2.00 மணியளவில் எரிந்த நிலையில் காணப்பட்ட பெண்ணொருவரின் சடலத்தை சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம் அதேயிடத்தைச் சேர்ந்த சச்சிதானந்தம் உமாப்பிரியா (வயது 25) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்ட சாவகச்சேரி நீதவான் எம்.கணேசராசா சடலத்தைப் (20ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


# தண்ணீர்த் தொட்டியில் தவறி விழுந்த குழந்தை மரணம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பாலாவி தெற்கில் தண்ணீர்த்தொட்டியில் தவறிவிழுந்த ஒன்றரை வயது குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இச்சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தருமேந்திரன் துளசிகா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-3,29)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)


# அமெரிக்காவில் இருந்து மீட்புப்படை வரும்

# நடேசனுக்கு உறுதி வழங்கப்பட்டதாம்

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட சமரின்போது அமெரிக்காவின் தலைமையில் விடுதலைப்புலிகளையும், மக்களையும் மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமெரிக்காவை தளமாகக் கொண்ட விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் பா.நடேசனுக்கு உறுதிமொழி வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிய-பசுபிக் பிராந்தியத்திற்கான அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஜேம்ஸ் கிளாட் என்பவருடன் தனக்கு நெருக்கிய தொடர்புகள் உள்ளதாகவும் விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜேம்ஸ் கிளாட் என்பவர் இலங்கை அரசின் நெருங்கிய நண்பர் என த நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் ஊடகவியலாளர் ஜோன் லீ அன்டர்சன் அண்மையில் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் 2009ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி நோர்வேயில் உள்ள பல்கலைக்கழகத்தின் அதிகாரி ஒருவரை தொடர்பு கொண்ட நடேசன் மீட்பு பணிகள் தொடர்பான தகவல்களை சரிபார்க்குமாறு தெரிவித்திருந்தார்.

ஆனால் அவர் இலங்கையில் உள்ள நோர்வே தூதரகத்தை தொடர்பு கொண்ட போது தமக்கு அவ்வாறான தகவல்கள் எவையும் தெரியாது என நோர்வே அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

பின்னர் அமெரிக்க தூதுவர் றோபேட் ஓ பிளேக் உடன் தொடர்புகளை ஏற்படுத்திய பின்னரே இந்த தகவல்கள் தவறானவை என தெரியவந்தது.

இதனிடையே விடுதலைப்புலிகளுக்கு இவ்வாறு தவறான தகவல்களை வழங்கிய அமெரிக்காவை தளமாகக் கொண்ட குறிப்பிட்ட நபர் தற்போது இந்தியா சென்று இந்திய தேசிய பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து ஒரு அரசியல் கட்சியை ஆரம்பிக்கும் பணிகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்துள்ளன. (ந-5)

# மகாகும்பாபிசேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி வடக்கு மனோன்மணி அம்பிகா சமேத அன்ன மகேஸ்வரர் தேவஸ்தான மகா கும்பாவிசேகம் எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை ஆரம்பமாகி காலை 10 மணி தொடக்கம் நாளை நண்பகல் 12 மணி வரை விக்கிரகங்களுக்கு எண்ணெய்க்காப்புச்சாத்தல் இடம்பெறும். (ந-6,7)

# இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி கராஜ்சடியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.து

நேற்று முற்பகல் 11.30 மணியளவில்ச ஐஸ் பழ விற்பனையில் ஈடுபட்டிருந்த மோட்டார் சைக்கிளின் மீது பின்னால் வந்த கன்ரனர் (கூலர்) வாகனம் மோதியதிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இதில் நீர்வேலி கந்தசாமி கோவிலடி யைச் சேர்ந்த இராசலிங்கம் தவசீலன் (வயது 29) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ந-6)



நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இக் கூட்டத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, உறுப்பினர்கள், பாதுகாப்புச் செயலாளர், முப்படைகளின் தளபதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# உரிமை கோரப்படாத பொருட்கள் நீதிமன்றில் ஒப்படைப்பு

உரிமை கோரப்படாத பொருட்கள் பொலிஸாரால் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ்.நீதவான் நீதிமன்றப்பதிவாளர் தெரிவித்துள்ளார். கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் உரிமை கோரப்படாத பல ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் தங்கச்சங்கிலி ஒன்றும் துவிச்சக்கரவண்டிகள் இரண்டும் உள்ளடங்கலாக பல பொருட்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் தவற விடப்பட்ட பொருள் தொடர்பில் சரியான அடையாளங்களை சமர்ப்பித்து நீதிமன்றில் பெற்றுக் கொள்ள முடியும் இந்தப் பொருட்களை மீளப் பெற்றுக் கொள்ளும் காலப்பகுதி மூன்று மாதமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தவறி னால் அவை ஏலத்தில் விடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ந-6)


**BARATHY**
**சித்தன்கேணி**
**O/L DAY CLASS**
நாளை ஆரம்பம்: 23.03.2011
புதன்- காலை 8 மணி
நீங்கள் நன்கு அறிந்த பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| விஞ்ஞானம் N.தேவா | கணிதம் S.சிவரூபன் |
| தமிழ் N.பாலா குகபரன் | வரலாறு K.சுதன் R.S.சந்திரன் |
| ஆங்கிலம் விஜயபாஸ்கர் மனோகரன் | சமயம் N.T.தரன் |
| புவியியல் சர்வேஸ்வரன் | நாடகம் கஜிதரன் |
| வணிகக்கல்வி முயற்சியாண்மை T. திருக்குமரன் | |

(ஆ-2747)

☼ மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் இப் பிரதேசத்தில் வேறு எந்தக் கல்வி நிறுவனத்திலும் கற்பிக்கமாட்டார்கள்.
☼ 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும். உங்கள் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.



**நான்காம் ஆண்டு நினைவு**

அமரர் பேரின்பநாதன் தயானந்தன் (நந்தன்)

(1-ம் வட்டாரம், மண்டைதீவு)



ஜனனம் 07 03 1980
மரணம் 22 03 2007

வெள்ளை உள்ளம் கொண்டவனே
உன் ஆசைக்கனவுகள் எத்தனை
என்றும் சிரிக்கும் உன் முகம்
இன்னும் எம்முன் நிற்கிறது
அதற்குள் கடந்தது நான்கு ஆண்டுகள்
ஆயினும் உன்நினைவு சுமந்து
உறவுகள் நாம் ஈரவிழிகளுடன்.

மண்டைதீவு
குடும்பத்தினர்
(C-2769)


# சைக்கிள்களில் சமாந்தரம் 15 பேருக்கு அபராதம்

யாழ்.நகரப்பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறாக சைக்கிள்களில் சமாந்தரமாகப் பயணித்த 15 பேரை நேற்று யாழ்ப்பாணம் பொலிஸார்கைது செய்து யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

குறித்த வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி எ.எ.ஆனந்தராசா ஒவ்வொருவருக்கும் தலா 500 ரூபாய் வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இவ்வாறு கடந்த சில தினங்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் பொலிஸாரால் 20 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தலா 500 ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-6)


**வாடகைக்குத் தேவை**

யாழ்.நகர்ப்புறத்திலிருந்து 2Km ற்கு உட்பட்ட பிரதேசங்களில் முற்பணம் ரூபாய் 50,000/= ஆகவும் மாதவாடகை ரூபாய் 4000-6000 வரையிலும் இருக்கத்தக்க தாக வாடகைக்கு வீடு தேவை. வாகன போக்குவரத்து வசதி இருக்கத்தக்க இடங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 0770229438
0772105324
(4207)



**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**
**க.பொ.த. (உயர்தரம்) 2013 புதிய அனுமதிகள்**

2010 டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த (சாதாரணதரப்) பரீட்சையில் சித்தி யடைந்து கணித, விஞ்ஞானம், வர்த்தகம், கலை பிரிவுகளுக்கு கல்வி கற்க தகுதியுடைய எமது கல்லூரி மாணவர்களும் மற்றும் எமது கல்லூரியில் கற்கவிரும்பும் புதிய மாணவர்களும் 23.03.2011 (புதன்) அன்று பாடசாலைக்கு வருகை தந்து விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து கற்கை நெறிக்குரிய அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

குறிப்பு

5ஏ பெறுபேற்றுக்கு மேல் பெறுபேறு உள்ளவர்கள் மகாஜனக் கல்லூரியின் அபிவிருத்தி நிதியத்தால் வழங்கப்படும் மாதாந்தம் ரூபாய் 1500 புலமைப்பரிசில் திட்டத்திற்கு உள்ளீர்க்கப்படுவர்.

(C-2767)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011


## இங்கிலாந்து வெல்லக்கூடாது

(லண்டன்)

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான உலகக்கிண்ண லீக் போட்டியில் இங்கிலாந்து அணி தோற்க வேண்டும். அப்போது தான் அப்பா விரைவில் வீட்டுக்கு வருவார் என கோலிங்வூட்டின் மகள்கள் தெரிவித்துள்ளனர்.

உலகக்கிண்ண தொடரில் நான்காவது காலிறுதி போட்டியில் இங்கிலாந்து, இலங்கை அணிகள் வரும் மார்ச் 26 ஆம் திகதி கொழும்பில் மோதுகின்றன. இதனிடையே இங்கிலாந்து அணி கடைசி லீக் போட்டியில் வென்றால் தான் காலிறுதி வாய்ப்பைத் தக்கவைக்க முடியும் என்ற நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சந்தித்தது. அப்போது இந்தப் போட்டியில் தோற்க வேண்டும் என இங்கிலாந்து நட்சத்திர வீரர் கோலிங்வூட்டின் மகள்கள் கெய்ரா, ஷன்னன் நினைப்பு வேறு மாதிரியாக இருக்கிறது.

ஏனெனில் நீண்ட நாட்களாக நடந்த ஆஷஸ் தொடர் முடிந்து வீட்டுக்கு அப்பா வருவார் என்று நினைத்துக்கொண்டிருந்த நேரத்தில் உலகக் கிண்ணத் தொடர் வந்து விட்டது. இதனால் மீண்டும் வீட்டுக்கு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் பின்னர் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து பாகிஸ்தான் வேகப்புயல் சொய்ப் ஓய்வு பெறவுள்ளார். இந்நிலையில் அவரின் 'கட் அவுட்' இஸ்லாமபாத்தில் அமைக்கப்பட்டு வருவதைப் படத்தில் காணலாம்.

## உலகக் கிண்ண வாய்ப்பு யாருக்கு? ஜோதிடரின் கணிப்பு இந்தியாவுக்கு

தோனிக்கு சாதகமாக கிரகங்களின் அமைப்பு இருப்பதால், இம்முறை இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்ல வாய்ப்பு இருப்பதாக, ஜோதிடரின் கணிப்பு தெரிவிக்கிறது.


உலகக்கிண்ண லீக் போட்டிகள் முடிந்து காலிறுதி போட்டிகள் நாளை மறுதினம் முதல் ஆரம்பமாகின்றன. இதில் நாளை மறுதினம் நடக்கும் இரண்டாவது காலிறுதியில் இந்திய அணி நடப்புச் சம்பியன் அவுஸ்ரேலியாவை சந்திக்கிறது.

### தோனி 1981

இந்தச் சூழலில் இந்தியாதான் உலகக் கிண்ணத்தை வெல்லும் என மும்பை ஜோதிடர் ஒருவர் கணித்துள்ளார். இதற்கு அணித்தலைவர் தோனியின் பிறந்த ஆண்டு பலமாக இருப்பதுதான் காரணம். இவர் 1981 இல் பிறந்துள்ளார். இதே ஆண்டில் பிறந்த ஸ்பெயின் கால்பந்து அணியின் தலைவர் கேசில்லாஸ் 2010 இல் உலகக் கிண்ணத்தை வென்றார்.

தற்போது பாலிவூட்டில் பிரபலமாக உள்ள ஷாகித் கபூர் 1981, ரன்பீர் கபூர் 1982 இல் பிறந்தவர்கள் தான். அதாவது அனைத்துத் துறையிலும் 1981 இல் பிறந்தவர்கள்தான் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

கடந்த 1974 இல் பிறந்த அவுஸ்திரேலியாவின் பொன்டிங் ஏற்கனவே இரண்டுமுறை உலகக் கிண்ணத்தை வென்றுவிட்டார்.



அதனால் இத்தொடரில் 1981 இல் பிறந்த இந்திய அணித்தலைவர் தோனி, தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித் ஆகியோரில் ஒருவருக்கு உலகக்கிண்ணத்தை வெல்லும் வாய்ப்புள்ளது.

### மற்றவர்கள் எப்படி

சூரியன் செவ்வாய் கிரகங்களின் ஆதிக்கம் நிறைந்த இலங்கை அணித்தலைவர் சங்கக்காரவுக்கு (1977), இம்முறை உலகக்கிண்ணம் கிடைக்காது. இங்கிலாந்தின் ஸ்ரொரஸிற்கு (1977) ஆஷஸ் வெற்றியுடன் எல்லாம் முடிந்துவிட்டது. இதனால் தான் அடுத்துவந்த ஒரு நாள் தொடரில் மோசமாகத் தோற்றது. பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி (1980) சிறப்பாகச் செயற்பட்டாலும் இவர் இம்ரான்கான் ஆகமுடியாது. விக்டோரி (1979), சமிக்கும் (1983) கிரகபலன்கள் அவ்வளவு அனுகூலமாக இல்லையாம்.

### கிளார்க் வந்தால்

கடந்த 2006 உலகக்கிண்ண கால்பந்து சம்பியன் பட்டம் வென்ற இத்தாலி அணித்தலைவர் கன்னவரோ பிறந்த ஆண்டு 1973. அவுஸ்திரேலிய அணி பார்ப்பதற்கு வலிமையாக இருந்தாலும் பொன்டிங்கிற்கு மீண்டும் உலகக் கிண்ணத்தை வெல்லும் அதிர்ஷ்டம் இல்லை. ஒரு வேளை காயம் காரணமாக பொன்டிங் விலகி 1981 இல் பிறந்த மைக்கெல் கிளார்க் அணித்தலைவர் பதவியேற்றால் மீண்டும் உலகக் கிண்ணம் வெல்ல வாய்ப்பு ஏற்படும்.

### இந்தியாவுக்கு வாய்ப்பு

தற்போதுள்ள இந்திய அணி நொக் அவுட் சுற்றில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்த காத்திருக்கிறது. அரையிறுதியில் பாகிஸ்தானை சந்திக்க நேர்ந்தாலும் மீண்டும் வெற்றிபெறுவது உறுதி.

கிரகங்களில் வலிமையானதாக உள்ள புளூட்டோ தான் 1983 இல் கபில் தேவுக்கு சாதகமாக இருந்தது. யாரும் எதிர்பார்க்காத வகையில் உலகக்கிண்ணத்தை வெல்லச் செய்தது.

தற்போது இதே பலன்கள் தோனிக்கு ஊக்கமாக அமைவதால் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்திவிடலாம்.

## கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!

MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்

தினமும் 5 பேருக்கு

5 ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு

மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு

வலம்புரியில் கேட்கப்படும்

உலகக்கிண்ண கேள்விகளுக்கு

[illegible]ன பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை பெற்றுக்கொள்ளுங்கள்

கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்

1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடொப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

## அரையிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள்?

1. ........................ 2. ........................

2. ........................ 4. ........................

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

தொ.பே: ..............................

தே.அ.அ.இல: ..............................

சரியான விடையை எழுதி கூப்பனை பூரணப்படுத்தி 22.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி

'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490

## இன்றைய கேள்வி?

பத்தாவது உலகக்கிண்ணத் தொடரில் அதிக போட்டிகளில் பூச்சியத்துடன் ஆட்டமிழந்த வீரர்?

..............................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 24.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.

பெயர்:- ..............................

முகவரி:- ..............................

..............................

தொ.பே:- ..............................

தே.அ.அ.இல:- ..............................

அனுப்ப வேண்டிய முகவரி

'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

## உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு?..............................

தொடர் நாயகன் விருது யாருக்கு?..............................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி **28.03.2011** இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

ரசிகர்களின் வேண்டுகோளிற்கிணங்க உலகக்கிண்ண இறுதியாட்ட விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி ஒரு வார காலத்திற்கு நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

பெயர்..............................

முகவரி..............................

தொலைபேசி..............................

தே.அ.அ.இல..............................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com

SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592

PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road Jaffna.
T.P.:021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டங்களுக்கிடையிலான இளைஞர் பரிமாற்று முகாம்

(யாழ்ப்பாணம்)

சர்வோதய சாந்தி சேனா இயக்கத்தின ரால் மாவட்டங்களுக்கிடையிலான இளைஞர் பரிமாற்று முகாம் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணி வரை அச்சுவேலி அருள்நந்தி பாடசாலை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சர் வோதய இயக்கத்தின் உபதலைவரும் சாந்தி சேனா இயக்கத்தின் பணிப்பாளருமான ரவீந் திர கண்டகே கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பிக்க வுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன், களுத்துறை சர் வோதய நிலையத்தின் மாவட்ட இணைப் பாளர் கே.உபாலி டி சில்வா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3)

# சிறுகைத்தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 100 பேருக்கு கடனுதவி

(பொலிகண்டி)

பருத்தித்துறை சுப்பர்மடம் மாதர் சங்க உறுப்பினர்களுக்கு நெல்லியடி கொமர்ஷல் வங்கியினால் கடன் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு மாதர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் வடமாகாண பிராந்திய முகாமை யாளர் எஸ்.பி.ரஜீவன் , கௌரவ விருந்தின ராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக கொமர் ஷல் வங்கியின் நெல்லியடி முகாமையாளர் எஸ்.கஜரூபன் ஆகியோர் கலந்து சிறப்பிக் கவுள்ளனர்.

இந்நிகழ்வின் போது சிறுகைத்தொழில் களை ஊக்குவிக்கும் வகையில் 100 பேருக்கு கடன் வழங்கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ-3-48-24)

# வீதியின் புனரமைப்பு வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் சிரமம்

(பருத்தித்துறை)

புறாப்பொறுக்கி ஆலடி கொலனி வீதி புனரமைப்புவேலைகள் முழுமையாக பூரணப் படுத்தப்படாமலுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியில் குறிப்பிட்டளவு நீண்ட தூரம் புனரமைக்கப்பட்ட போதிலும் 150 மீற்றர் அளவில் வீதி புனரமைக்கப்படாமல் பல மாதங் களாக கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

புனரமைக்கப்படாத வீதியில் கற்கள் பறிக் கப்பட்டிருப்பதனால் வீதி போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக் கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரியவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்து குறித்த வீதியை புனரமைத்துத்தர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக் கின்றனர். (ஸ்ரீ-3-10)

# முன்பள்ளி சிறுவர்களின் கண்காட்சி

(பொலிகண்டி)

தொண்டைமானாறு அரசடி கலைவாணி முன்பள்ளியின் சிறுவர் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு கலைவாணி முன்பள்ளியில் சனசமூக நிலை யத்தலைவர் சி.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.




இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன், கௌரவ விருந்தினராக தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலய அதிபர் ல.ஸ்ரீநடராசா, சிறப்பு விருந்தினர்க ளாக பருத்தித்துறைமுன்பள்ளிபிரதேசஇணைப் பாளர் திருமதி.ரவீந்திரன் தவலட்சுமிதேவி, வடமராட்சி முன்பள்ளி வலய இணைப்பாளர் திருமதி.சுரேஸ் சுதாயினி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் என சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.(ஸ்ரீ-3-48)

# வயோதிபப் பெண்ணின் தங்கச்சங்கிலி அபகரிப்பு

(கரவெட்டி)

அயல் வீட்டாரை பற்றி விசாரிக்க வந்த தாக கூறி வயோதிபப் பெண்மணியொருவ ரிடம் கதை விடுத்து அவரது கழுத்தில் அணிந் திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்ற சம்பவம் நேற்றுக்காலை 6.45 மணிக்கு உதயகதிர்காமம் பெருந்தெருப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவ தாவது,

வயோதிபப் பெண் தனது வீட்டில் பல் துலக்கிக் கொண்டிருந்த வேளை இலக்கத் தகடு இன்றி மோட்டார்சைக்கிளில் வந்த இரு வர் மேற்படி வயோதிபப் பெண்ணிடம் அயல் வீட்டாரைப் பற்றி விசாரித்தபொழுது பதில் கூற முற்பட்ட வயோதிபப் பெண்ணின் கழுத் திலிருந்த 4 பவுண் தங்கச்சங்கிலியை அபக ரித்து தப்பிச்சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த திருமதி.பாலகோபாலன் என்பவரின் தங்கச் சங்கிலியே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள் ளது. (ஸ்ரீ-3-24)

# துவிச்சக்கரவண்டியில் சமாந்தரமாக சென்ற ஐந்து பேருக்கு அபராதம்

(கரவெட்டி)

துவிச்சக்கர வண்டியில் சமாந்தரமாக சென்ற 5 பேருக்கெதிராக சாவகச்சேரி பொலி சாரால் சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதான வீதியில் போக்கு வரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகை யில் சென்ற 5 நபர்களை கைது செய்த பொலி சார் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேச ராசா முன்னிலையில் மன்றில் ஆஜர்ப்படுத் தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி மேற்படி நபர் கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமை யால் குற்றவாளியாகக் கண்டு தலா ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் இது போன்ற வழக்குகளில் எதிர்வரும் காலங்களில் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்க கூடாதென்று குறித்த நபர்களை எச்சரித்து நீதிபதி விடுவித்தார்.(ஸ்ரீ-3-24-29)

# தென்மராட்சி வலய பாடசாலைகளின் சதுரங்கப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி கல்விவலய பாடசாலை களுக்கிடையில் நடைபெற்ற இருபாலாருக்கு மான சதுரங்கப் போட்டி முடிவுகள் அறி விக்கப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு பிரி விலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரங்கள் வருமாறு,

**15 வயதின் கீழ் ஆண்கள்**

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கச்சாய் அ.த.க. பாடசாலை

**19 வயதின் கீழ் ஆண்கள்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை விக்னேஸ்வராக்கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்

**15 வயதின் கீழ் பெண்கள்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகா மம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், விடத்தல்பளை கமலாசினி வித்தியாலயம்

**19 வயதின் கீழ் பெண்கள்**

மீசாலை விக்னேஸ்வராக்கல்லூரி, கொடிகா மம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், கச்சாய் அ.த.க.பாடசாலை (ஸ்ரீ-3)

# இரு வெவ்வேறிடங்களில் இடம்பெற்ற விபத்து சம்பவங்களில் இருவர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இரு வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வடமராட்சி கிழக்கு நாகர் கோவிலில் நேற்றுக்காலை 8.30 மணிக்கு கண்ணி வெடி அகற்றும் பிரிவு வாகனத்திலிருந்து தவறிவிழுந்து படுகாயமடைந்த யாழ்ப் பாணம் 4 ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த முத்துராசா பேசி அன்ரனிநியூட்டன் என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

மற்றொரு சம்பவத்தில் சாவகச்சேரி நுணாவிலில் இருந்து மோட்டார் சைக்கிளில் நெல்லியடி நகருக்கு நேற்று காலை 9 மணிக்கு வந்து கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் கப்பூது வெளியில் மோட்டார் சைக் கிளில் இருந்து தவறிவிழுந்து படுகாயம டைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் சாவகச்சேரி நுணாவில் பகுதியைச் சேர்ந்த முருகன் பத்மநாதன் (வயது 55) என்ற வயோதிபரே சிகிச்சை பெற்று வருகிறார். (ஸ்ரீ-3-24)


# அனுமதிப்பத்திரமின்றி மாட்டிறைச்சி வைத்திருந்த நபருக்கு அபராதம்

(கரவெட்டி)


குருநகர் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி 30 கிலோ கிராம் மாட்டிறைச்சியைத் தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் யாழ். பொலிசாரால் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய நபர் நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதி மன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னி லையில் மன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் சான்றுப் பொருளான மாட்டிறைச்சியை அழிக்க பொலிசாருக்கு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-6-24)







வல்வை ஆதி கோவிலடி வள்ளியம்மாள் ஊக்குவிப்பு நிதியம் மற்றும் ஆதிசக்தி சனசமூக அபிவிருத்தி நிறுவனங்கள் இணைந்து நடத்திய மாணவர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வல்வெட்டித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.சிறிகாந்தா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் குறுநாடகத்தின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-வல்வெட்டித்துறைச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நல்லவராவது எப்படி?

"நீ எப்படி நினைக்கிறாயோ அப்படியே ஆகின்றாய்" என்று பெரியவர்கள் சொல்வதுண்டு.

அது போலவே நாம் எப்படிப் பேசுகிறோமோ அப்படியே ஆகிறோம் என்பதிலும் உண்மையிருக்கிறது.

நாம் எப்டித்தோன்றுகின்றோமோ அப்படியே ஆகிறோம் என்பதிலும் உண்மையிருக்கிறது.

அசோக வனத்தில் சீதையை சிறை வைத்திருந்தான் இராவணன்.

"எவ்வளவோ முயற்சிகள் செய்தும் சீதையின் கவனம் தன்பக்கம் திரும்பவில்லையே" என்று கவலைப் பட்டான்.

"சீதை என்மேல் ஆசைப்படவேண்டும். அதற்கு என்ன வழி" என்று யோசித்தான்.

அமைச்சர்களிடமெல்லாம் ஆலோசனை கேட்டான். ஓர் அமைச்சர் சொன்னார்.

"உன்னைப் பார்த்து சீதை ஆசைப்படவேண்டும் என்றால் அதற்கு ஒரே வழிதான் எனக்குத் தோன்றுகிறது. அதாவது நீ இராமன்மாதிரி வேஷம் போட்டுக் கொள்" அதன்பின் சிதையின் முன்னால் போய் நில். ஒரவேளை அதைப்பார்த்து அவள் உன்மீது ஆசைப்படலாம் என்றார்.

இராவணன் யோசித்தான். இந்த யோசனை சரியென்றேபட்டது.

உடனே இராமன் போன்று ஒப்பனை செய்து கொண்டான். ஆடை, அணிகலன் எல்லாம் அணிந்து கொண்டு சீதையைச் சந்திக்கப் புறப்பட்டான்.

அதற்கு முன் ஒருதரம் கண்ணாடியின் முன்னால் நின்று ஒப்பனையை சரிபார்த்து கொள்ள விரும்பினான்.

போய் கண்ணாடியின் முன்னால் நின்றான்.

அசல் இராமனைப் போலவே அவனதுவேடம் தோன்றியது. கொஞ்சநேரம் அதையே உற்றுப்பார்த்தான். இப்பொழுது அவனுடைய மனம் மாறிவிடுகிறது. இன்னொருத்தன் மனைவி மீது ஆசை கொள்ளாதே என்று சொல்கிறது.

இராமனாக வேஷம் போட்டால் கூட பிறர் மனைவியை நோக்காத அந்தக் குணம் வந்துவிடுகிறது. இது பக்திப்பிரசங்கம் ஒன்றில் ஒரு பெரியவர் சொல்லக் கேட்ட கதை.

என் கதையும் இப்படித்தான். நல்ல விடயங்களையே சொல்லவேண்டிய அலுவலகக் கடமை எனக்கு இருந்தது.

அது என்னையும் நல்லவன் என்று மற்றவர்களை நம்ப வைத்திருக்கிறது. அதனாலேயே நல்லவனாக மாறிக் கொண்டிருப்பதை ஓரளவுக்கு உணரமுடிகிறது.

ஒருநாள் ஒருதாய் தன்னுடைய மகளை அழைத்துக் கொண்டு நான் வேலை செய்யும் அலுவலகத்திற்கு வந்தார்.

வாசலில் இருந்தவர்களிடம் இன்று ஒருதகவலை சொல்பவரை பார்க்கவேண்டும் என்று சொல்லியிருகிறார். அவர்கள் என்னிடம் அழைத்து வந்தார்கள். "என்னம்மா விடயம்?" என்று விசாரித்தேன்.

"வேற ஒன்றுமில்லை ஐயா... உங்களுடைய கையால் என் பொண்ணு நெற்றியில் வீபூதி பூசி விட்டு சீக்கிரம் கல்யாணம் நடக்க வேண்மென்று அவளை ஆசீர்வாதம் பண்ணவேண்டும்" என்றார்.

எனக்கு தூக்கிவாரிப்போட்டது.

"அம்மா... நான் ஆசீர்வாதம் பண்ணக்கூடிய அளவுக்கு அப்படி ஒன்றும்..."

"அதெல்லாம் உங்களுக்கு தெரியாது உங்களைப்பற்றி எங்களுக்குத் தெரியும். இதோ கையோடு வீபூதி கொண்டு வந்திருக்கிறேன். பூசிவிடுங்க, ஆசீர்வாதம் பண்ணுங்க" என்றார்.

நான் வேறுவழியில்லாமல் அவர்களின் திருப்திக்காக அவர்கள் சொன்னது போலவே செய்தேன். அவர்கள் மனநிறைவோடு திரும்பிப் போனார்கள். அவர்கள் போனபின் நான் யோசித்துப் பார்த்தேன்.

"தினமும் ஐந்து நிமிடம் நல்ல விடயங்களைச் சொல்வதற்கே நமக்கு இந்தளவுக்கு மரியாதை கிடைக்கிறதே, நாம் நியமாகவே நல்லவனாக மாறிவிட்டால்..."

நான் அன்று தொடக்கம் அந்த முயற்சியில் இறங்கினேன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.மாவட்ட வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தகநிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர்சோதனை நடவடிக்கையின்போது, பொருட்களுக்கான விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை மற்றும் குளிர்பானங்களை பொறிக்கப் பட்ட விலையிலும் பார்க்க அதிகமான விலையில் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் கண்டுபிடிக்கப்பட்டு பல வர்த்தக நிலையங்களின் மீது வழக்குத் தொடரப்பட்டது.

திருநெல்வேலி, நல்லூர், பருத்தித்துறை, சித்தங்கேணி, கொக்குவில், வட்டுக்கோட்டை, கோண்டாவில், அரியாலை, உரும்பிராய், புத்தூர், சங்கானை, கல்வியங்காடு, மானிப்பாய் ஆகிய இடங்க ளிலேயே இந்த திடீர் சோதனை நடவடிக்கைமேற்கொள்ளப் பட்டது.

யாழ்ப்பாணம், மல்லாகம் ஆகிய நீதிமன்றங் களில் இவர்கள் மீது வழக்குத்தொடரப்பட்டு மொத்தமாக 27 ஆயிரத்து 700 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டபார்வையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஸ்ரீ-6)

# க.பொ.த (சா/த) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

***யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்***

ரி.கலைநீதன்(8ஏ,பி), வ.சர்மிளா (7ஏ,பி,எஸ்), அ.துலக்சனா (6ஏ,3சி), பு.லக்சியா (6ஏ,2 எஸ்), வ.சாமினா (5ஏ,3பி,எஸ்), எஸ்.சிந்துஜன் (5ஏ,3பி,சி),எஸ். தனுஜா(5ஏ,2பி, 2சி)

***யா/கனகரத்தினம் மத்திய மகாவித் தியாலயம்***

ம.மதுஜீவிதன்(7ஏ,2பி), சொ.செந்தூரன்(5ஏ, 2பி, சி), அ.நிதர்சன்(4ஏ,2பி, 3சி), த.விதுர்சன் (3ஏ,2பி ,4சி), அ.கிருசாந் (3ஏ,பி, 4சி,எஸ்),க.கலைச்செல்வன் (3ஏ,பி,4சி,எஸ்), சி.தர்சனா (3ஏ,பி, 4சி, எஸ்)

***யா/ஒஸ்மானியாக் கல்லூரி***

என்.எவ்.நசிரா( 4ஏ, 4பி,எஸ்), எஸ்.எவ்.சஜானா நஸீமா (2ஏ, 6பி)

(ஸ்ரீ-3)

# உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தினால் கோப்பாய் லயன்ஸ் கிளப் அனுசரணையுடன் கோப்பாய் கோட்ட பாடசாலைகளில் கற்கும் க.பொ.த உயர்தர கணக்கீடு, வணிகக்கல்வி பாட மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்றும் நாளையும் காலை 8 மணி தொடக்கம் மாலை4 மணிவரை யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 160 | 150 |
| தக்காளி | 80 | 100 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 80 | 90 | 100 | 80 |
| கரட் | 150 | 200 | 200 | 140 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 80 | 100 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 55 | 70 | 70 | 60 |
| பாகற்காய் | 120 | 130 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 100 | - |
| பயற்றங்காய் | 90 | 100 | 120 | 160 |
| லீக்ஸ் | 150 | 150 | 150 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 150 | 200 | 150 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 500 | 500 |
| போஞ்சி | 120 | 120 | 160 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 80 | 50 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 50 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 50 |

# இராசி பலன்

*22.03.2011*
*(பங்குனி 08,திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு*
*திருதியை பிற்பகல் 5.37 மணிவரை*
*சுவாதி பின்னிரவு 4.34 மணிவரை*
*இராகுகாலம் 3.17-4.47 மணிவரை*
*சுப நேரம் 10.47-12.17 மணிவரை*
*காரைக்கால் அம்மையார் குருபூசை*

**மேடம்** விருப்பங்கள் நிறைவேறும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், வாழ்க்கைத் துணைவழியே வரவுகள் வந்து சேரலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**இடபம்** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், உத்தியோக மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், பணவரவு திருப்தி தரும்.

**மிதுனம்** உங்கள் வளர்ச்சிக்கு உதவிய சிலரை சந்திப்பீர்கள், மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கடகம்** மனதில் நீண்ட நாட்களாக இருந்து வந்த பாரம் குறையலாம், தொழிலில் புதிய திட்டங்களை வகுப்பீர்கள், பெற்றோர் மீது பாசம் அதிகரிக்கும்.

**சிங்கம்** நண்பர்களின் ஆலோசனைகள் பயனுள்ளதாக அமையும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், தொழிலில் ஆர்வம் கூடும், சகோதரர் உதவியுண்டு.

**கன்னி** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், விவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளர்ச்சிகாணும் நாள், பணவரவு திருப்தி தரும்.

**துலாம்** காரிய வெற்றிக்கு கந்தனை வழிபடவேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், கொடுத்த வாக்கை காப்பாற்ற கொஞ்சம் கொள்கையைத் தளர்த்த வேண்டிவரலாம்.

**விருச்சிகம்** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், தொழில்ரீதியாக எடுத்த புது முயற்சிக்கு தொகை கேட்ட இடத்தில் கிடைக்கலாம், காரிய அலைச்சலுண்டு.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், பிறரிடம் ஒப்படைத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள்.


**மகரம்** உதிரி வருமானங்கள் வந்து சேரும், உடல் ஆரோக்கியத்திற்கு ஒரு தொகையைச் செலவுசெய்வீர்கள், மற்றவரிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் உங்களிடமே வந்துசேரும்.

**கும்பம்** ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள், குடும்பத்தினர்களை அனுசரித்து செல்வது நல்லது, தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் தாமதம் ஏற்படலாம்.

**மீனம்** எதையும் பல முறையோசித்து செய்வது நல்லது, வரவைவிட செலவு அதிகரிக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் சிரமம் ஏற்படலாம்,மனச்சஞ்சலமான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கைப் பொலிஸ் பிரிவின் 146 ஆவது பொலிஸ் வீரர் தின நிகழ்வுகள் நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா உரையாற்றுவதையும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா அருகில் நிற்பதையும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பொலிஸாரையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-எஸ்.கரன்)*

# தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு சுத்திகரிப்பு பணிகள்

(யாழ்ப்பாணம்)

தெற்மேற்கு பருவ மழை ஆரம்பமாகவுள்ளதால் நுளம்புகள் பெருகி டெங்குப் பரம்பலை தடுக்கும் நோக்கில் ஜனாதிபதி செயலணிக் குழுவினால் நாளை முதல் 29 ஆம் திகதி வரை தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாரத்தில் நிறுவனங்களிலும் பொது இடங்களிலும் வீடுகளிலும் நுளம்புக் கட்டுப்பாட்டு சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை புதன்கிழமை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் , வர்த்தக நிலையங்களிலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை நுளம்பு பெருகக் கூடிய உயர் வாய்ப்புக்கள் (High risk areas) பஸ் சாலைகள், டயர் கடைகள், வாகனம் திருத்தும் இடங்கள், பழைய இரும்பு சேகரிக்கும் இடங்கள் ஆகியவற்றிலும்,

எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை அரசாங்கப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் , உயர் கல்வி நிலையங்களிலும் மறுநாள் சனிக்கிழமை வீடுகளிலும்,

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பொது இடங்கள், வணக்கத் தலங்கள், சந்தைகள், மயானங்களிலும் மறுநாள் திங்கட்கிழமை பராமரிப்பு அற்ற காணிகள், பராமரிப்பற்ற வீடுகள், புகையிரதப் பாதைகள், வீதிக் கரையோரங்கள் ஆகியவற்றிலும் துப்புரவுப் பணிகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முன்பள்ளிகள், மீதியான மேலே குறிப்பிடப்படாத இடங்கள் ஆகியவற்றிலும் துப்புரவுப் பணிகள் நடை பெறவுள்ளன.

இவற்றினைக் கண்காணிக்க நிறுவனங்களின் சுத்திகரிப்புப் பணிகளுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவர்களும், தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்களின் சுத்திகரிப்புப் பணிகளுக்கு உரிமையாளரும் அரச தனியார் பாடசாலைகளின் அதிபரும் இதற்கென நியமிக்கப்பட்ட பொறுப்பாசிரி யரும் இப்பணிகளை ஒருங்கிணைக்க வேண்டும்.

மேலும் தனியார் கல்வி நிலையங்களின் சுத்திகரிப்புப் பணி உரிமையாளரால் தொழிலாளர்களை கூலிக்கு அமர்த்தி எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னரே துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வீடுகளின் சுத்திகரிப்புப் பணியை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நாளையில் இருந்தே ஆரம்பிக்கலாம் எனவும் இதனை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னரே சகல வீடுகளும் துப்புரவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

வீடுகளின் சுத்திகரிப்புப் பணியை மேற்பார்வை செய்ய கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் , குடும்ப நல உத்தியோகத்தர் , சுகாதாரத் தொண்டர்கள், பாதுகாப்புப் படையினர் அடங்கிய குழு அமைக்கப்படும். இதனை பிரதேசத்திற்குரிய பொது சுகாதார பரிசோதகர் ஒருங்கிணைப்பார். மற்றும் பொது இடங்களான வணக்கத் தலங்கள், மயானங்கள் என்பவற்றை கிராம மட்ட அமைப்புக்களான கிராம அபிவிருத்தி சங்கங்கள் , மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் , விளையாட்டுக் கழகங்களின் உதவியுடன் சிரமதான முறையில் துப்புரவு செய்ய வேண்டும் எனவும் இதனைக் கிராமமட்ட டெங்கு தடுப்பு செயலணிக் குழு ஒழுங்கு செய்ய வேண்டும்.

முன்பள்ளிகளுக்கான துப்புரவு பணிகளை அங்கு பயிலும் பிள்ளைகளின் பெற்றோரால் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்படி சுத்திகரிப்புப் பணிகளை பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் பிரதேச செயலாளர், உள்ளூராட்சி மன்ற செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, வலயக் கல்விப் பணிப்பாளர் (பாடசாலைகளுக்கு) ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய குழு மேற்பார்வை செய்யும்.

அத்துடன் மேலே குறிப்பிடப்பட்ட திகதிகளில் சுத்திகரிப்புப் பணிமனை அன்றைய தினங்களில் ஏற்பாடு செய்வதில் ஏதும் சிரமம் இருப்பின் குறித்த திகதிக்கு முன்னதாக ஏற்பாடுகளைச் செய்யலாம். குறிக்கப்பட்ட தினத்தில் நிறுவனம் துப்புரவாக இருக்க வேண்டும்.

இப்பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத தமது நிறுவனத்தில் / வீட்டில் நுளம்பு பெருகக் கூடிய இடங்களை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

PATRICIAN INSTITUTES

பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

ஆரம்பம்: 28.03.2011

மாணவர்களுக்கு மகிழ்ச்சியான ஓர் நற்செய்தி

எமது நிறுவனம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதியப்பட்டு பயிற்சிகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன என்பதை அறியத்தருகிறோம்.

TVEC REG-No-P25/0021

COMPUTER COURSES

Advanced in Computer Programming, Diploma in Microsoft Office, Diploma in Desk Top Publishing, Diploma in Video Editing, Diploma in Type Setting, Diploma in Computerized Accounting. Diploma in Software Engineering, Diploma in Micro media, Diploma in Web Multimedia, professional Diploma in Graphic Design, Computer Hardware Technology, Internet & E-mail, General Information Technology (GIT), Information & Communication Technology (ICT), Children's Kids.

Short Hand Typing (English), Short Hand Typing (Tamil), General Moto Mechanism, Motorcycle Mechanism, General Electrician (wiring & Re Winding), Radio & T.V Repairing, Lathe machine Operation, Arc Welding, Carpentry (with use of machinery), Refrigeration and Air conditioning.

குறிப்பு

1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் பயிற்சிக் கட்டணத்தில் சலுகைகள் பெறலாம்.
3. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



மேலதிக விபரங்களுக்கு:

Register, Patrician Institute,
61(59),St.Patrick's Road, Jaffna.
T.P:0212226148
Fax:6148
E.mail:spitee@sltnet.lk

(தி-2745)

# தயாமாஸ்டர், ஜோர்ஜ்மாஸ்டர் மீதான வழக்கு விசாரணை மீண்டும் ஒத்திவைப்பு

விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் மற்றும் அவ் அமைப்பின் மொழி பெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் தொடர்பில் மேற்கொண்ட விசாரணை அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிப்பதாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் கொழும்பு நீதிவான் ரஷ்மி சிங்கப்புலியிடம் நேற்று அறிவித்தனர்.

வழக்கு விசாரணை நேற்று நடைபெற்ற போது சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். இதன்போது சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி தமது தரப்பு வாதிகளின் வழக்கு விசாரணையை விரைவாக முடிக்குமாறு கேட்டுக்கொண்டார். இதனையடுத்து கருத்து வெளியிட்ட குற்றப்புலனாய்வு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ரவிந்திர விமல சிறி, சந்தேக நபர்கள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையை சட்டமா அதிபருக்கு வழங்கவுள்ளதாக தெரிவித்தார்.

இதனையடுத்து வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான் அன்றையதினம் மேலதிக அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு புலனாய்வு பிரிவினருக்கு உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)

# நாட்டின் உள் விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடக்கூடாது

## கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் உள்விவகாரங்களில் வெளிநாட்டு சக்திகள் தலையீடு செய்யக்கூடாது என கர்தினால் மெல்கம ரஞ்சித் தெரிவித்துள்ளார். குருணாகல் பிரதேசத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சக்திகளின் தலையீடு பிரச்சினைகளை மேலும் சிக்கல் மிகுந்ததாக்கும் என்றும் சர்வதேச சமூகத்தின் தலையீடு இன்றி நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனங்களுக்கு இடையில் நிலவிவரும் பேதங்களை களைவதற்கு சகல இன மக்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளனத்தில் மகளிர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. இதில் சம்மேளனத் தலைவர் க.தர்மசேகரம், யாழ். போதனா வைத்தியசாலை பால்நிலை வன்முறைக்கெதிரான செயற்குழு இணைப்பாளர் ரஜனி சந்திரசேகரம் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-எஸ்.கரன்)*

# கேணல் கடாபிக்கு ஆதரவாக குரல் கொடுக்கும் ஜே.வி.பி



லிபியாவில் இடம்பெற்று வரும் விமான தாக்குதல்கள் கண்டனத்துக்குரியது என்றும் அமெரிக்கர்களை எதிர்த்து லிபிய மக்கள் போராட வேண்டுமென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில்அக்கட்சிநேற்றுமுன் தினம் வெளியிட்ட அறிக்கையில்,

அமெரிக்காவின் முதலாளித்துவத்துக்கு எதிராக லிபியா போராட வேண்டும். இறுதி வெற்றிவரை லிபிய மக்கள் போராட வேண்டும். லிபியாவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக அவர்கள் போர் தொடுக்கவில்லை.மாறாக,அங்குள்ள எண்ணெய் வளங்களை கையகப்படுத்தவே மேற்குலகம் முயன்று வருகிறது.

ஜனநாயகம் வேண்டி வட ஆபிரிக்கா மற்றும் அரபு நாடுகளில் பல மில்லியன் மக்கள் போராட்டங்களில் குதித்துள்ளனர். அதற்கு நாம் எமது ஆதரவுகளை வழங்குவோம்.

துனிசியா மற்றும் எகிப்தில் நடைபெற்ற போராட்டங்களில் மக்கள் அந்த அரசுகளை தூக்கி எறிந்த போதும் தற்போது அந்த நாடுகளின் நிர்வாகத்தை மேற்கு உலகமே கைப்பற்றியுள்ளது.

ஈராக்கில் நடத்தியதைப் போலவே லிபியாவிலும் நேட்டோ நாடுகளின் போர்வையில் அமெரிக்கா தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

ஆனால் நாம் லிபிய மக்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவுகளை வழங்க தயாராக உள்ளோம். மேற்குலகம் தமது தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசியேற்றல்

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12.30 மணிவரை குருநகர் சி.டி. எம்.எச்.க்கு முன்பாகவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12.30 மணி வரை பாங்சால் வீதி, 3 ஆம் குறுக்குத் தெருச் சந்தியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்குறித்த ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

# வெலிக்கடைச் சிறையிலிருந்து கைத்தொலைபேசிகள் மீட்பு

வெலிக்கடை சிறைச்சாலையில் பெண்கள் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போது பெருந்தொகையான கையடக்கத் தொலைபேசிகளும் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த 19ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பிரஸ்தாப சோதனையின் போது சிறைக்கூண்டுக்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 44 கையடக்கத் தொலைபேசிகளும் ரூபா ஆறாயிரம் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை பெண்கள் பிரிவின் சிறைக்கூண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது பெருந்தொகையான கைத்தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டமை இதுவே முதற் தடவை என்று கூறப்படுகின்றது.

தொலைபேசிகள், பணம் என் பன மட்டுமன்றி, சிம் காட்கள், மின்சார சாதனங்கள் உள்ளிட்ட பலபொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தற்போது சிறைச்சாலை அத்தியட்சகர் பொறுப்பில் வைக்கப்பட்டிருக்கும் மேற்படி கையடக்கத் தொலைபேசிகள், சிம்காட்கள் என்பவற்றின் உரிமையாளர்களைக் கண்டறிந்து கொள்வதற்கு தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனங்களின் உதவியை சிறைச்சாலைகள் திணைக்களம் நாடியுள்ளது. (ஸ்ரீ-2)

# கச்சதீவு அந்தோனியார் திருவிழாவில் பன்னிரண்டாயிரம் பக்தர்கள் பங்கேற்பு

(கொழும்பு)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உற்சவத்தில் இலங்கை மற்றும் தமிழகத்தை சேர்ந்த 12 ஆயிரம் பேர் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆலயத்தின் திருப்பலித் தொழுகையை வண ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் மேற்கொண்டிருந்தார். இந்த உற்சவத்தில் படைத்தரப்பினர் அதிக கவனம் செலுத்தியிருந்ததுடன் அங்கு பாதுகாப்புக்களும் அதிகரிக்கப்பட்டிருந்தன.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, வடபிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் சுசில் வீரசேகரா ஆகியோரும் இந்த உற்சத்தில் பங்குபற்றியிருந்தனர்.

வருடாந்த உற்சவத்தில் பங்குபற்றுவதற்கு தமிழக மீனவர்களுக்கு முதலில் அனுமதிகளை மறுத்த இலங்கை அரசு பின்னர் அனுமதிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)




★ *1622* - வேர்ஜினியாவில் ஜேம்ஸ்டவுன் நகரில் அல்கோன்கியான் பழங்குடிகள் 347 ஆங்கில குடியேற்றவாசிகளைப் படுகொலை செய்தனர்.

★ *1829* - கிரேக்கத்துக்கான எல்லைகளை மூன்று வல்லரசுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா ஆகியன வரையறுத்தன.

★ *1873* - புவேர்ட்டோ ரிக்கோவின் ஸ்பானிய தேசிய சபையில் அந்நாட்டில் அடிமைத் தொழிலை அழிக்க சட்டமியற்றப்பட்டது.

★ *1895* - முதன் முதலாக லூமியேர சகோதரர்கள் அசையும் திரைப்படத்தை பிரத்தியேகமாகக் காண்பித்தார்கள்.

★ *1939* - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி லித்துவேனியாவிடம் இருந்து மெமெல் பிரதேசத்தைக் கைப்பற்றியது.

★ *1943* - இரண்டாம் உலகப் போர்: பெலாரசின் காட்டின் நகர மக்கள் அனைவரும் நாசி ஆதிக்கவாதிகளால் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர்.

★ *1945* - அரபு கூட்டமைப்பு கெய்ரோவில் அமைக்கப்பட்டது.

★ *1960* - ஆர்தர் ஷாவ்லொவ், மற்றும் சார்ல்ஸ் டவுன்ஸ் ஆகியோர் லேசருக்கான முதலாவது காப்புரிமத்தைப் பெற்றார்கள்.

★ *1965* - இலங்கையில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து டட்லி சேனநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்தது.

★ *1993* - இன்டெல் நிறுவனம் முதல் பெண்டியம் chip (80586) இனை அறிமுகம் செய்தது.

★ *1995* - சோவியத் விண்வெளிவீரர் வலேரி பொல்யாக்கொப் விண்ணில் 438 நாட்கள் கழித்து விட்டு பூமி திரும்பினார்.

★ *1997*- ஹேல்-பொப் வால்வெள்ளி பூமிக்குக் கிட்டவாக வந்தது.

★ *2004* - ஹமாஸ் இயக்கத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவரான அஹமது யாசின் இஸ்ரேலிய வான் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

★ *2006* - பாஸ்க் ஆயுதக்குழு ஈடிஏ கால வரையறையற்ற போர் நிறுத்தத்தை அறிவித்தது.

### பிறப்புகள்

★ *1868* - றொபேர்ட் மில்லிக்கன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1953)

★ *1931* - பேர்ட்டன் ரிக்டர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்புகள்

*1627* - பிலிப்பே டி ஒலிவேரா, யாழ்ப்பாணத்தின் முதலாவது போர்த்துக்கேய ஆளுநர்.

*2005* - ஜெமினி கணேசன், தமிழ்த் திரையுலக நடிகர் (பி. 1920)

## *1952 - டி.எஸ். சேனநாயக்க, இலங்கையின் முதலாவது பிரதமர் (பி.1884)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

13

## ஆய்வுகூடங்களில் தரம் பேணலும் கட்டுப்பாடும்

| இல | விபரம் | திருப்தி/ திருப்தி/ தரமானது | பிரச்சினைகள் அடையாளம் காணப்படல் |
|---|---|---|---|
| 3 | ஆய்விற்கு தேவையான பொருட்கள் (களஞ்சியமும் வழங்கலும்) | ஆம்/ இல்லை | |
| 3.1 | எரியூட்டும் | ஆம்/ இல்லை | |
| 3.2 | கண்ணாடித்தட்டுப்பெட்டி | ஆம்/ இல்லை | |
| 3.3 | காபோல் பியூசின் | ஆம்/ இல்லை | |
| 3.4 | மெதிலின் நீலம் | ஆம்/ இல்லை | |
| 3.5 | 3 வீதம் அமில அற்ககோல் | ஆம்/ இல்லை | |
| 3.6 | வடிகட்டிய வீதம் | ஆம்/இல்லை | |
| 3.7 | உபகரணங்கள் | ஆம்/இல்லை | |
| 3.8 | இருவிழி நுணுக்குக் காட்டிகள் போதிய அளவு செயற்றிறன் மிக்கது வருடத்தில் மேலதிக மின்குமிழ் | ஆம்/இல்லை | |
| 4. | வெளித்தர நிர்ணயம் | ஆம்/இல்லை | |
| 4.1 | சிலைட்டுகளின் களஞ்சியப்படுத்தலும். ஆய்வுகூடப் பதிவு புத்தகங்களிற்கு | ஆம்/இல்லை | |
| 4.2 | எல்லா சிலைட்டுகள் பெட்டியில் சேமித்தவை ஒன்றும் தவறவிடவில்லை | ஆம்/இல்லை | |
| 4.3 | ஒன்றை ஒன்று தொடாதவாறு சேமித்தவை | ஆம்/இல்லை | |
| 4.4 | வெளித்தர நிர்ணய படிவம் இருத்தல் | ஆம்/இல்லை | |

### ஆய்வுகூடப் பாதுகாப்பு

1.கழிவுகள் முறையாக அகற்றப்படல் வேண்டும்.

2.நிலத்தில் சிந்தவிடக்கூடாது.

3.சளி பரிசோதிக்கும் இடம் தனியாக அமைய வேண்டும்.

4.முழங்கை அல்லது காலினால் இயங்கும்நீர்க்குழாய்கள் அமைதல்வேண்டும்.

5.காற்றோட்டம் மணிக்கு 13 தடவைகள். அறையின் கனவளவை மாற்ற வேண்டும்

### காசநோய்க்கான சிகிச்சை

காசநோய்க்கான சிகிச்சைக்கான காலம் இரண்டு அவத்தைகளாக அமையும்.

1.ஆரம்ப அவத்தை

2.தொடர் அவத்தை

### ஆரம்ப அவத்தை

ஆரம்ப அவத்தையில் விரைவாக பக்ரீறியாக்கள் கொல்லப்படும்.நோய் தொற்றக்கூடிய நிலையில் உள்ளவர்கள் தொற்றல் அற்ற நிலைக்கு மாற்றப்படும். நோய் அறிகுறிகள் குறைவடையும். சளியில் கிருமி இல்லாது போகும். இவ்வவத்தையில் நேரடிக் கண்காணிப்பின் கீழான சிகிச்சை வழங்கப்படும். இதனால் மருந்திற்கு எதிர்ப்புள்ள கிருமிகள் உருவாதல் தவிர்க்கப்படும். ஏனெனில், ஆரம்பத்திலேயே பக்ரீறியா அதிக அளவிற் காணப்படும். அதன்போதே எதிர்ப்புத் தன்மை உள்ள பக்ரீறியா உருவாகும். ஆரம்ப அவத்தையில் இறைபம்பிசின், ஐசோயினசிட், பிறசினமைட், எத்தம்பியூட்டோல் என்பன பயன்படுத்தப்படும். தற்போது இவை நான்கும் தனி ஒரு வில்லையாக உபயோகத்தில் உள்ளது.35 கிலோ நிறைக்கு உள்ளே உள்ளவர்களுக்கு இரண்டு வில்லைகளும், 35-50 கிலோ நிறைக்கு உள்ளவர்களுக்கு மூன்று வில்லைகளும், 50 கிலோநிறைக்கும்மேல் உடையவர்களுக்கு நான்கு வில்லைகளும் கொடுக்கப்படும்.

### தொடர் அவத்தை

தொடர் அவத்தையில் பொதுவாக நான்கு மாதங்கள் மருந்துகள் கொடுக்கப்படும். இறைபம்பிசீன், ஐசோனியசிட் ஆகிய இரண்டு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. இவை தற்போது தனிவில்லையாக உள்ளது. 35 கிலோ நிறைக்குக் குறைவாகவுடையோருக்கு உள்ள இரண்டும், 35-50 கிலோ வரை நிறையுடையவருக்கு 3 உம், 50 கிலோவிற்குமேல் நிறையுடையவருக்கு நான்கு மருந்து வில்லைகளும் கொடுக்கப்படுகின்றன. மேற்கூறிய மருந்துகள் வகை 1 உரிய சிகிச்சையாகும். காசநோய் மீளவும் ஏற்பட்டால், அல்லது சிகிச்சை பயனளிக்காதுவிடின், அல்லது சிகிச்சையின் இடைநடுவில் கைவிடப்பட்டால் வகை II சிகிச்சை மேற்கொள்ளப்படும். இதன்போது ஆரம்ப அவத்தையின் முதல் இருமாதங்கள், நான்கு மருந்துச் சேர்மானத்துள் ஸ்ரெப்றோமைசின் ஊசி போடப்படும். பின் ஒரு மாதம் நான்கு மருந்துகளும், பின் 5 மாதங்கள் இறைபம்பிசின், ஐசோனியசிட், எத்தம்பியூடோல் என்ற மூன்று மருந்துகளும் கொடுக்கப்படும். இந்த மூன்று மருந்துகளும் சேர்ந்த தனிவில்லை உள்ளது. இதுவும் 35 கிலோ நிறைக்குக் குறைவாக உடையோருக்கு இரண்டு வில்லைகளும், 35-50 கிலோ வரையிலான நிறையுடையோருக்கு மூன்று வில்லைகளும், 50 கிலோவிற்குமேல் நிறையுடையோருக்கு நான்கு வில்லைகளும் கொடுக்கப்படும்.

### சிகிச்சையினை அவதானித்தல்

காசநோயாளர்களின் சளியில் கிருமி காணப்படின் அல்லது உடலில் ஏனைய பகுதியில் காசநோய் ஏற்படின், அவர்களுக்குச் சரியான சிகிச்சை உரிய காலத்திற்குக் கொடுப்பதால் குணப்படுத்த முடியும்.

இரண்டு வழிகளில் சிகிச்சையின் பலனை அவதானிக்கலாம்.

1. குறித்த இடைவெளியில் சளிப்பரிசோதனை செய்தல். சாதாரணமாக 2 மாதத்தின் பின்பும் 5 மாதத்திலும் சிகிச்சை முடிந்த பின்பும் சளிப்பரிசோதனை செய்யப்படும். வகை II சிகிச்சையில் 3 மாதத்தில் சளிப்பரிசோதனை செய்யப்படும்.

சளியில் கிருமி இல்லாது போதல் 2 மாதத்தில் 80% மேலாகவும், 3 மாதத்தில் 90% மேலாகவும் இருக்கும். ஏற்கனவே காசநோய் வந்து சிகிச்சை அளித்து, மீளவும் காசநோய் ஏற்பட்டோரில் ஏறத்தாழ இதே வீதத்தில் இருக்கும். சிகிச்சை அளித்துப் பலனளிக்காதவர்களில் மீளச் சிகிச்சை அளிக்கப்படுவோரில் 3 மாதத்தில் சளியின் கிருமி இல்லாது போதல் 95% மேல் இருக்கும். சளியில் கிருமியில்லாத, நுரையீரல் காசம் உடையோருக்கும் 2 மாத முடிவில் சளிப் பரிசோதனை செய்யப்படும். இதன்போது ஆரம்பத்தில் சிலவேளைகளில் சளியில் கிருமி காணப்படும். தவறுதலாகக் கண்டறியப்படாதுவிடின் அதனைக் கண்டறியலாம். சுவாசப்பை தவிர்ந்த ஏனைய இடங்களில் ஏற்படும் காசநோய்களிற்கும் ஒழுங்காக மருந்துகள் அளிக்கப்படல் வேண்டும். குணமடையும் வீதம் 90% இற்குமேல் இருத்தல் வேண்டும்.



Dr,சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

### சிகிச்சையின் விளைவுகள்

சிகிச்சையின் விளைவுகள் பின்வருவனவற்றில் ஒன்றாக அமையும்.

1. குணமடைதல் (ஆரம்பத்தில் சளியில் கிருமி காணப்பட்டவை. சிகிச்சையின் பின் கிருமி காணப்படாதவை)

2.சிகிச்சையினை முழுமையாகப் பெறல்

3. சிகிச்சை பயனளிக்காமை

4. இடையில் இறத்தல்

5. சிகிச்சையைக் கைவிடல்

6. வேறு இடங்களுக்கு மாற்றப்பட்ட சிகிச்சையின் விளைவுகள் பதியப்படும். இடையில் சிகிச்சையினைக் கைவிடுவோரினைக் கண்டறிந்து முழுமையாகச் சிகிச்சை பெற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(தொடரும்)

# கண்டியில் சர்வதேச பௌத்த மாநாடு ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் சர்வதேச பௌத்த மாநாடு கண்டியில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

கண்டி பல்லேகல சர்வதேச பௌத்த பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான இம்மாநாட்டுக்கான ஏற்பாடுகளை இந்திய கலாசார நட்புறவுப் பேரவையும் இலங்கை வெளிவிவகார அமைச்சும் இணைந்து மேற்கொண்டிருந்தன.

நேற்றுமுன்தினம் கண்டிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மேற்படி மாநாட்டை ஆரம்பித்து வைத்து மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுகளில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் பிரதமர் டி.எம்.ஜயரட்ன, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இந்தியத் தூதுவர் அசோக் கே காந்த் மற்றும் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், மதத் [illegible] ஆகிய முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இம்மா நாட்டில் சர்வதேச நாடுகளின் மத விவகாரங் கள், இலங்கைக்கும் ஏனைய பௌத்த நாடுகளுக்குமிடையிலான நல்லுறவினை வலுப்படுத்தல், பௌத்த நாடுகள் இணைந்த எதிர்கால செயற்பாடுகள் போன்ற தொனிப் பொருள்களில் தேசிய மற்றும் சர்வதேச அறிஞர்களின் சொற்பொழிவுகளும் கலந்துரையாடல்களும் இடம் பெற்றது.

(ஸ்ரீ-2)

# இந்திய மதத்தலங்களுக்கு செல்லும் இலங்கை பக்தர்களுக்கு விசேட ரயில் சேவை

(கொழும்பு)

புத்தகாயா , கபிலவஸ்து போன்ற இந்தியாவின் முக்கிய மதத்தலங்களுக்கு சென்னையிலிருந்து இலகுவாக பயணிப்பதற்கான விசேட புகையிரத சேவைகளை இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிப்பதற்கு இந்திய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கேகாந் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து இந்தியாவின் புனித தலங்களுக்கு செல்வோரின் நன்மை கருதி இத்தீர்மானத்தை இந்திய அரசு மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்த அவர்,

தலைமன்னார், இராமேஸ்வரம், கொழும்பு, தூத்துக்குடி கப்பல் சேவைகளோடு இணைந்ததாக இந்த சென்னை புகையிரத சேவை நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.இந்த புகையிரத சேவை மூலம் இந்தியாவின் 14 புனித தலங்களுக்கு சென்னையிலிருந்து சுலபமாக செல்வதற்கு வாய்ப்புக் கிட்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்திய கலாசார நட்புறவைப் பேரவை ஏற்பாடு செய்திருந்த சர்வதேச பௌத்த மாநாடு நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் தலைமையில் கண்டி பல்லேகல சர்வதேச பௌத்த பல்கலைக்கழக மண்டபத்தில் ஆரம்பமானது.

இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்திய உயர்ஸ்தானிகர் இவ்வாறு தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# வீதி விபத்தில் சிறுவன் பலி

(கொழும்பு)

கண்டி கல்ஹின்னை பிரதேசத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் இரண்டரை வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

கண்டி போக்குவரத்துச் சபையின் கண்டி-வடக்கு சாலைக்குச் சொந்தமான பஸ் வண்டி ஒன்றின் [illegible] மோதுண்டே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணமான சிறுவன் ஐயூப்கான் ஹாதிமின் சடலம் தற்போது அங்கும்பறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. அங்கும்பறை பொலீஸார் மேலதிக விசாரணை [illegible] மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்





70

கவிப்பேரரசு வைரமுத்து

படபடன்னு உத்தரவு போட்டாரு பேயத்தேவர். களத்துல கெடக்குற கருத அள்ளிக் கடத்துறதா? தட்டுமுட்டுச் சாமான எடுக்குறதா? தானியத்த தூக்குறதா? கதவு நெல சன்னல இடிச்சு எடுக்கிறதா?

அவசர ஆத்துரத்துல புத்தி வேல செய்யாது மனுசனுக்கு. ஆடிக்காத்துல அங்கிட்டும் இங்கிட்டும் ஆடுற அரசங்குட்டி மாதிரி, தட்டுத்தடமாறித் தவிச்ச மூளைய ஒரு நிதானத்துக்குக் கொண்டுவந்து யோசிச்சு முடிவெடுத்தாரு.

முதல்ல கரைசேக்க வேண்டியது-ஆளுக. அப்பறம்-ஆடுமாடுக. பெறகு-தட்டு முட்டுச் சாமான்ங்க; தானியங்க. கடைசியா-கதவு நெல சன்னலுக.

"யம்மா முருகாயி! மின்னலு! ஏறுங் காத்தா வண்டியில. ஏலே மொக்கா! மாடுகள வண்டியில பூட்டு. ஆடுகோழிகள வண்டியில ஏத்து. முக்கியமான மூட்டை முடிச்சுகளை மட்டும் ஒங்க மடியில வச்சுக்குங்கம்மா. ஏறுங்க! ஏறுங்க! ஒங்கள வெள்ளயாம் பாறையில வெரசா விட்டுட்டு வெரசா வரணும். நாலஞ்சு நடையடிச்சாத்தான் நம்ம பொருளு நம்மளுது"

தொழுவில கட்டிக்கெடந்த ஆடுமாடுகள அவுத்து 'முன்னுக்கப் போங்க'ன்னு சத்தம் போட்டு பத்திவிட்டான் மொக்கராசு.

சும்மா சொழட்டிச் சொழட்டி அடிக்குது ஆடிக்காத்து. எங்கேயோ நடக்கமாட்டாத நாய் ஒண்ணு 'ஊ'ன்னு ஊளையிடுது. குச்சு வீட்டுக் கூரைக பிச்சுக்கிட்டுப் பறக்குதுக.

கைக்குச் சிக்குன சாமான்களையெல்லாம் தூக்கிப் போட்டுக்கிட்டு, தட்டுத் தடுமாறி வண்டியில ஏறி ஒரு தகரப் பெட்டிய மடியில புடிச்சு ஒக்காந்த முருகாயி வண்டி புறப்படற நேரத்துல. "இருங்க! இருங்க! இந்தா வந்திடறேன்"னு வண்டிச் சக்கரத்து ஆரைக்கால்கள்ல கால்வச்சுப் பொசுக்குன்னு எறங்குனா. 'தொசுக்'குத் 'தொசுக்'குன்னு ஒரே ஓட்டமா ஓடி. போன வேகத்துல திரும்பி வந்தா. என்னா ஏதுன்னு எல்லாரும் பாத்தாக.

அவ கையில சீல; அழகம்மா ஆவியும் வாசனையும் ஒட்டியிருக்கிற அந்தச் சீல.

"இந்தச் சிறுக்கி ஞாபகத்துக்கு எட்டினது எனக்கு எட்டாமப் போச்சே! சந்தோசமாத் தன்னத் தானே திட்டிக்கிட்டாரு பேயத்தேவர்."

ரெண்டு ஆட்டுக்குட்டிகளக் காலப்புடிச்சு ஒக்காந்திருந்தா மின்னலு. கோழிக்கூட்ட அமுக்கி ஒக்காந்திருந்தான் மொக்கராசு. அதுபாட்டுக்கு அசபோட்டுக்கிட்டே வந்துச்சு கட்டைவண்டிக்குப் பின்னால கட்டி விட்டிருந்த வெள்ளாட்டங்கிடா. கன்னிமார் ஓடையக் கடக்கிற வரைக்கும் தான் கஷ்டம்; அப்பறம் மேடேறியிரலாம்.

வெள்ளையாம்பாறையில நிறுத்துனாரு வண்டிய. எறங்கச்சொன்னாரு எல்லாரையும். குடைசாச்சாரு வண்டிய; கொட்டுனாரு எல்லாத்தையம். ஊரடித் தோட்டத்த மீக்கிறதுக்காகச் சேத்து வச்ச ரெண்டாயிரத்திச் சொச்ச ரூபாய அவசர அவசரமா அவுத்துக் குடுத்தாரு முருகாயி கையில. "பண்டபாத் திரங்களையும் தானியங்களையும் ரெண்டாம் நடையில கரைசேக்கணும்" வெரட்றாரு மாடுகள; வெறியெடுத்து ஓடுதுக.

வீட்டு வாசல நெருங்குறப்ப ஆடிக்காத்தோட சேத்து அலச்சத்தமும் கேட்ட மாதிரி இருந்துச்சு. வண்டிய விட்டுக்குதிச்சு வீட்டு வாசல்ல இருந்த வேப்பமரத்துல குபுக்குன்னு ஏறித் தெக்கபாத்த மொக்கராசு. "தாத்தா! நம்ம பொழப்பு போச்சு தாத்தா... நம்மகளத்துல காயப்போட்ட கம்பங்கருதுள்ல அணத்தண்ணி அலையடிக்குது தாத்தா"ன்னு உள் தொண்டை கிழியக்கத்தினான்.

அணத்தண்ணி நீர் மட்டம் முப்பத்தேழடியத் தாண்டி முப்பத்தெட்டுலபோயி முட்டி நிக்குது. ஆயிரம் நல்ல பாம்புக ஒரே நேரத்துல படையெடுத்துப் படமெடுத்து 'உஸ்ஸூ புஸ்ஸூ'ன்னு சீறிவர்றமாதிரி "கள்ளிப்பட்டி எங்க கள்ளிப்பட்டி எங்க"ன்னு விசாரிச்சுக்கிட்டே பலிஞ்சடுகுடு பாடி வருதுக அணத்தண்ணி அலைக.

கும்புட்ட சாமி குடியக் கெடுத்திருச்சுறா மொக்க

அடிவயிறு வலிக்கப் பேயத்தேவர் கத்துன பெருஞ் சத்தம் கேட்டு, ஆளில்லாத ஊர்ல வேப்பமரத்துல ஒக்காந்திருந்த கடைசிக் காக்கவும் பறந்தோடிப் போச்சு.

களத்துல காயப்போட்ட கம்பங்கருதுகள எத்தி எத்தி விளையாடிக்கிட்டு ஒரு எம்பு எம்பி "இந்தா வந்துட்டோம் இந்தா வந்துட்டோம்"ன்னு அமட்டிகிட்டே வருது அணத்தண்ணி.

வேப்பமரத்துலயிருந்து குதிக்கத் தெரியாமப் பொத்துன்னு குதிச்சு முழங்கால் அடிபட்டு ஒழுகிற ரத்தத்தத் தொடச்சும் தொடைக்காம எந்திருச்ச மொக்கராசு, "இன்ன நேரம்ன்னு இல்ல; இன்னைக்கே தண்ணி வந்து ஊர முழுங்கிப்புடும் போலிருக்கே தாத்தா"ன்னு அழுதுக்கிட்டே கத்துறான்.

அதுக்குள்ள பேயத்தேவர் ஒத்த ஆளா ஓடிப் போய் அம்மிக்கல்லத் தூக்குறாரு.

ஆபத்துல மனுசனுக்குப் புத்தி கொறைஞ்சு போகும்; சக்தி சாஸ்தி ஆகும். எங்கிட்டிருந்துதான் அந்தத் தாட்டியம் வந்துச்சோ பேயத்தேவருக்கு. இடுப்புல அம்மிக்கல்ல அணச்சுக்கிட்டே ஒத்தக் கையில குழவியத் தூக்கி ஓடிவாராரு.

"தாத்தா"ன்னு ஓடிவந்து தாங்க வந்தவன், "ஏலே போடா! போயி சட்டிபானையத் தூக்குடா"ன்னு சத்தம் போடுறாரு.

அம்மி-குழவி-சட்டி-பானை-தோலு-சாலு-மம்பட்டி-கடப்பாரை-பலகை- குலுக்கை-வேல்கம்பு- சாட்டக்கம்பு-வெட்டருவா-பட்டாக்கத்தி-பெரியதேவர் பொத்திப் படுத்த கிழிஞ்சு போன பழைய கம்பளி-சாமி படத்துக்குக் கீழ அழகம்மா வச்சிருந்த உண்டியலு-எல்லாத்தையும் வண்டிக்குக் கொண்டுவந்து சேக்கிறாக.

கண்டேத்தியா சமான்கள் ஏத்தவும் பிதுங்கி நிக்குது வண்டி "எதையும் சிந்தாமச்சிதறாமப் புடிச்சுக்கடா!" ன்னு சொல்லிட்டு வண்டியில ஏறி ஒக்காந்து விரட்றாரு மாடுகள வெறியெடுத்த ஆள் மாதிரி.

இழுக்க முடியாத கடும்பாரம் ஏத்தவும் எட்டு வைக்க முடியாம நெளியுதுக மாடுக. சடக்குன்னு கீழ குனிஞ்சாரு பேயத்தேவர். மாட்டு வால இங்கிட்டு ஒரு கடி அங்கிட்டு ஒரு கடி கடிக்கவும். படக்குன்னு ஒரு சுண்டு சுண்டிப் பறக்குதுக மாடுக.

கம்பங்கருதுளத் தின்டு தீத்துட்டு வெறியெடுத்து ஓடிவந்து ஊரடித்தோட்டத்துப் புளிய மரத்துல புளியங்கா திங்கலாம்ன்னு மரத்துமேல ஏறுது தண்ணி.

'என்னியக் காப்பத்த ஆளில்லையா'ன்னு ஆகாயத்துக்கும் பூமிக்குமாக் கையேந்தி இப்பவோ பெறகோன்னு இடுப்புத் தண்ணியில நிக்கிது புளியமரம்.


புளியமரத்துக் கூடுகள்ல கண்ணுமுழிக்காத குஞ்சுக் குருவிக அடிமரத்து வழியா சாவு ஏறிவருதுன்னு தெரியாம அதுக பாட்டுக்கு ஒறங்கிக்கிட்டிருக்குக. தாய்க் குருவிக மட்டும் என்னமோ ஏதோன்னு எட்டியெட்டிப் பாத்துக் கீச்சான் கீச்சான்னு கத்துதுக.

தண்ணி சிவீர்ன்னு இருக்கு; செந்தண்ணியா இருக்கு. ரொம்பப் பேரு ரத்தம் குடிச்சிருக்கும் போலிருக்கு. தண்ணிக்குத் தாகமும் பெருந்தாகமா இருக்கும் போலிருக்கு. தளுக்குன்னு தவ்வி ஊரடித்தோட்டத்த எட்டிமுழுங்கி ஏப்பம் விட்டிருச்சு.

அம்புட்டுத்தான்! இன்னும் ரெண்டே ரெண்டு பர்லாங்தான் கள்ளிப்பட்டி.

ரெண்டாம் நடையில கொண்டுவந்த சரக்குகள எறக்கி வச்சுட்டு. வண்டியத் திரும்பி மூணாம் நடைக்குப் பேயத்தேவர் கௌம்ப, "யப்பே! போகாதப்பே! வெள்ளையாம் பாறையில இருந்து பாத்தாலே தண்ணி வாரது தெரியுது. பழிவாங்க வார ஆளுமாதிரி வெறியெடுத்துப்போயி வருது. எடுத்த வரைக்கும் போதும்! பொழைச் சவரைக்கும் போதும்; போயிருவமப்பே!"ன்னு பொலம்பி ரெண்டு மாடுகளுக்கும் மத்தியில நின்னு நேக்காலப் புடிச்சு நிறுத்தி வழிமறிச்சு அழுகுறா மின்னலு.

*(வளரும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயாளர்களுக்கான உணவுமுறை


4

நீங்கள் ஒரு நீரிழிவு நோயாளி.

உங்களுக்கு ஏற்பட்ட நோயைக் கட்டுப் பாட்டிற்குள் வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வளவுதானே!

இரண்டே இரண்டு முக்கிய வழிகள் இருக்கின்றன. அவற்றை மிகவும் தீவிரமாகக் கடைப்பிடியுங்கள். உங்கள் நோய் காலமெல்லாம் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்.





அந்த இரண்டு வழிகளில் ஒன்று உணவுமுறை மற்றையது உடற்பயிற்சி.

சரியான உணவு முறையும், உடற்பயிற்சியும் நீரிழிவு நோயை காலமெல்லாம் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளும் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

**உணவுமுறை:**

குறையினும் மிகினும் நோய் தரக்கூடியது உணவு.

அளவோடு உண்டால்தான் அது அமிர்தம்; அளவுக்கு மீறினால் அதுவும் நஞ்சாகும்.

ஒருவேளை உண்பவன் யோகி, இருவேளை உண்பவன் போகி (இல்லறத்தான்), மூன்று வேளையும் உண்பவன் ரோகி (நோயாளி) என்பார்கள்.

எல்லோருமே யோகியாக இருக்க விரும்புவோம். யோகியாக இருக்க விரும்புவோம். ஆனால் ரோகியாக இருக்க விரும்பமாட்டோம்.

நீரிழிவு நோயாளிகளைப் பொறுத்தவரை அவர்கள் ஏற்கனவே ரோகியாகிவிட்டார்கள். இந்த ரோகத்தைத் தடுத்துக்கொள்ள அவர்களுக்கு உணவு முறை அவசியம். உணவு முறையை பட்டியலிட்டுக்கொள்ள வேண்டும்.

நீரிழிவு நோயாளிகளை மிகவும் ஒல்லியானவர்கள், மிதமான எடையுடன் இருப்பவர்கள், மிகவும் பருமனான உடல் எடை கொண்டவர்கள் என மூன்று வகையினராகப் பிரித்துக் கொண்டால்தான் எந்த வகையினருக்கு எவ்வளவு உணவு கொடுக்க வேண்டும் என்ற பட்டியல் சரியாகப் பொருந்தும்.




உதாரணமாக, ஒருவருக்கு சராசரியாக தினமும் இரண்டாயிரத்து அறுநூறு கலோரி சத்து தரக்கூடிய உணவு தேவை என வைத்



துக்கொள்ளுங்கள். இது யாருக்குப் பொருந்தும் என்றால், மிகவும் ஒல்லியாக, ஊட்டச் சத்து இல்லாமல் இருக்கிறார் பாருங்கள். அவருக்குப் பொருந்தும். இதையே உடற்பருமன் மிக்கவர் சாப்பிட்டால் நீரிழிவு நோய் அதிகமாக ஆரம்பித்துவிடும்.

ஆகவே, உங்கள் உடல்வாகு எப்படிப்பட்டது என்பதை முதலில் தீர்மானம் செய்து கொள்ளுங்கள். உயரத்தை முதலில் அளந்து கொள்ளுங்கள். நீங்கள் மிகவும் ஒல்லியாக இருந்தால் இரண்டாயிரத்து அறுநூறு கலோரி தரும் உணவை கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுங்கள். நீங்கள் மிதமான எடை கொண்டவராக இருந்தால் இரண்டாயிரத்து இருநூறு கலோரி உணவை சாப்பிடுங்கள்.

உங்களுக்கு உடல் பருமன் அதிகம் என்றால் ஆயிரத்து எண்ணூறு கலோரி சத்து தரும் உணவுக்கு மேல் உண்பது வேண்டாம்.

உணவுமுறை என வந்துவிட்டால் எதையெதை சாப்பிட வேண்டும் எதையெதை சாப்பிடக்கூடாது என்பதைப் பற்றி தெரிந்து வைத்திருக்க வேண்டும்.



**சாப்பிடக் கூடாதவை**

சாப்பிடக் கூடியவை பற்றிதானே எல்லோரும் முதலில் சொல்வார்கள். நீங்கள் மட்டும் சாப்பிடக்கூடாதவை என பட்டியல் போடுகிறீர்கள் என நினைப்பீர்கள்.

சாப்பிடக்கூடாததை முதலிலேயே தவிர்த்துவிட்டால் மீதமுள்ளதை யெல்லாம் சாப்பிடலாம் அல்லவா?

நிறைய அரிசி சோறு மற்றும் அரிசி கஞ்சி குடிப்பதைத் தவிர்த்துவிடுங்கள்.

உணவுப் பொருளில் அதிகமான மாச்சத்து உள்ளது. கேழ்வரகு, கோதுமை போன்றவற்றிலும் மாச்சத்து அதிகம் தான். ஆனால் இவற்றின் மேல் தோல் இவை சீக்கிரமாக ஜீரணமாவதைத் தடை செய்து விடுகின்றன.


ஆனால் அரிசியில் மேல்தோல் நீக்கப் பட்டு விடுவதால் இது உடனே செரிந்து திடீரென இரத்தத்தில் சீனியை அதிகமாகி விடும். அடுத்து உடனே பசிக்கும். மேலும்


பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.


மேலும் சாப்பிடும்போது சீனியின் அளவு அதிகரிக்கும்.

நெய், எண்ணெய், தேங்காய் போன்றவற்றை உண்ணாதீர்கள். எந்த இறைச்சியை வாங்கினாலும் எண்ணெய்யில் பொரித்து உண்ணாதீர்கள். (தொடரும்)

# கண்களைக் காப்போம்



2

**மாறுகண்**


பெரும்பாலும் மாறுகண் பிறவியில் ஏற்படுகின்ற கண் பாதிப்பாகும். நடைமுறைப் பேச்சுவழக்கில் இதனை ஒன்றரைக் கண் என அழைப்பார்கள். ஒன்றரைக் கண்ணாளர்கள் அதிர்ஷ்டக்காரர் என்றும் பேசிக் கொள்வதுண்டு. இந்த மாறுகண் பாதிப்பை நவீன கண் மருத்துவத்தின் மூலம் எளிதில் குணப்படுத்தலாம் என்பது பலருக்குத் தெரிவதில்லை.

ஒரு கண் பார்க்கும் திசையினை மற்றொரு கண் பார்க்காமல் இருப்பது தான் மாறுகண் என்பதாகும். நம்மை உற்றுப்பார்ப்பது போல இருக்கும். ஆனால் அவர்கள் வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருப்பார்கள். மாறுகண்ணில் சில வகைகள் உள்ளன. ஒரு கண் நேராக பார்க்கும் மற்றொரு கண் உள்முகமாக பார்க்கும். இதற்கு Convergent என்றுபெயர். இக்குறைபாடு குழந்தைகளிடம் அதிகம் இருக்கும். இன்னொரு வகை ஒரு கண் நேராகப் பார்க்கும். இன்னொரு கண் வெளிப்புறமாக பார்க்கும். இதற்கு Divergent என்றுபெயர். ஒருகண்மட்டும் மாறு கண்ணாக இருப்பது இரண்டு கண்களும் மாறி மாறு கண்களாக இருப்பது.

**மாறு கண் ஏற்பட காரணங்கள்**

பிறவிலேயே பிறப்பால் இந்த மாறு கண் சிலருக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும். இதனை Congenital Squint என்போம். இன்னொரு வகை சில குழந்தைகளுக்கு 3 வயதுக்கு மேல் ஏற்படலாம். கண்ணில் இருக்கும் பார்வைக் குறைபாட்டிற்கு ஏற்ப பார்வையை சரி செய்யும் துல்லியமான பார்வை கண்ணாடி போடாததினால் மாறுகண் ஏற்படலாம். சிலருக்கு Paralytic Squint என்கின்ற மாறுகண் பாதிப்பு ஏற்படாலம். இப்பாதிப்பு கண்தசைகளை இயக்கும் நரம்புகள் தளர்ச்சி அடைவதனால் ஏற்படுவதாகும். இது வயது முதிர்ந்தவர்களுக்கு ஏற்படும்.

மாறுகண்ணில் நேராக பார்க்கும் கண்ணைத் தவிர உள்ளேயோ, வெளியேயோ பார்க்கும் கண்களை அதிகம் பயன்படுத்தாததனால் அந்தக் கண் சோம்பல் கண்ணாக




மாறிவிடும். இக்காரணத்தினால் அக்கண் பார்வைத்திறன் குறைந்து விட வாய்ப்பு உண்டாகும்.

Occluddion Therapy எனும் முறையில் மாறுகண்ணை சத்திரசிகிச்சை செய்து சில பயிற்சிகளால் குணப்படுத்தி விடலாம். இதனை பிறவி மாறுகண்ணாக இருந்தால் குழந்தையின் ஒன்றரை வயதுக்குள் செய்து விடுவது நல்லது. மாறுகண்ணை இளம்பராயத்தில் குணப்படுத்த முன் வருவதே புத்திசாலித்தனம்.

**விழித்திரை நீரிழிவு நோய்**

இரத்தத்தில் சீனியின் அளவு அதிமாவதால் நீரிழிவு நோய் ஏற்படுகிறது. இந்த நோய் அதிகப்படியாக கண்களைத் தான் பாதிக்கிறது. இந்த நிலையை டயபடிக் ரெட்டினோபதி என்கின்றோம்.

20 ஆண்டுகள் முன்புவரை நல்ல பழக்கவழக்கங்களினாலும் நல்ல உணவு முறைகளாலும் கட்டுப்பாட்டில் இருந்த இந்தநோய் இப்போது ஆண்களையே அல்லாமல் பெண்களையும் தாக்குகிறது. இந்த நிலை உருவாகக் காரணம் முறைகேடான உணவுப் பழக்கவழக்கங்களும், போதுமான உடல் உழைப்பு இல்லாமையே ஆகும்.

இந்த நோய் பரம்பரையாக வர வாய்ப்புகள் உள்ளன. ஆகையால் தாய்,தந்தை, உடன்பிறப்புகளுக்கும் இந்த நோய் வர வாய்ப்புள்ளது.எனவே 40 வயதிலிருந்து சீனியின் அளவை அறிதல் நல்லது. இந்த நோய்க்கு மும்முனையில் சிகிச்சை அளிக் கப்படுகின்றது.

**கண் பாதிப்பு**

சீனியின் அளவு அதிகமாவதால் உடலில் எல்லா பாகங்களும் பாதிக்கப்படுகின்றது. குறிப்பாக கண்ணின் பாதிப்பு அதிகமாக இருக்கிறது. இதனால் கண் இமை முதல் விழித்திரை வரை ஒவ்வொரு பகுதியும் மற்றும் நரம்புகளும் பாதிக்கப்படுகின்றன.

**ஒவ்வாமை**

பொதுவாக சீனி அதிகமாக உள்ளவர்கள் ஒவ்வாமைக்கு (அலர்ஜி) ஆளாகிறார்கள். இதனால் கண் பிசுபிசுப்புத்தன்மை, அரிப்பு மற்றும் வீக்கம் ஏற்படுகிறது. இதற்கு அன்டி அலர்ஜி மருந்துகள் பயன்படுத்தி கட்டுப் படுத்தலாம். இவை அனைத்தும் மருத்துவர் ஆலோசனைப்படி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**கண்கட்டி**

சீனியின் அளவு அதிகமாவதால் கண் இமையில் கட்டிவரும். 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கண் கட்டி அடிக்கடி வந்தால் நீரிழிவு நோய் இருக்கின்றதா? என்று பரீட்சிக்கவும்.


கண் சிகிச்சை நிபுணர்
டாக்டர் என் அருள்மொழிவர்மன்,MS.,DO.,
சென்னை-6


**பார்வையின் அளவு**

அளவுக்கு அதிகமான சீனியினால் கண் பார்வையின் அளவு தாறுமாறாக மாறும். அதனால் மூக்கு கண்ணாடி அடிக்கடி மாற்ற வேண்டியிருக்கும். இதனைத் தவிர்க்க சீனியின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

**கண்புரை**

சீனியின் அளவு அதிகமாகும் போது கண்ணின் புரை விரைவில் ஏற்படும். இந்தக் கண்புரையை சிறிய துவாரத்தின் மூலம் நவீன முறையில் அறுவை சிகிச்சை செய்து மடித்து வைக்கக்கூடிய லென்சை பொருத்திக் கொள்வது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஹற்றன் நஷனல் வங்கியின் சங்கானைக் கிளையில் கடந்த 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்ற "பத்தும் விமன" சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மேற்படி கிளையின் முகாமையாளர் என். தயாகரன் உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மேற்படி சீட்டுழுப்பில் வெற்றிபெற்ற ஒருவருக்கு பொலிஸ் அதிகாரி பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

### மனித உரிமைகள் தொடர்பான

# தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டத்தை விரைவில் அமுல்படுத்துவதற்கு திட்டம்

(கொழும்பு)

மனித உரிமைகளை ஊக்குவிக்கவும் அவற்றை பாதுகாப்பதற்குமாக தயாரிக்கப்பட்டுவரும் தேசிய செயற்பாட்டு வேலைத் திட்டத்துக்கு விரைவில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படும் என்று மனித உரிமைகள் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன் தேசிய செயற்பாட்டு வேலைத் திட்டத்தை அமுல்படுத்துகின்றமை தொடர்பில் கண்காணிப்பதற்கு தேசிய மட்ட குழு ஒன்றும் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் தயாரிக்கப்பட்டிருந்த ஆரம்பகட்ட வரைபில் அமுல்படுத்தக் கூடிய விடயங்களை ஆராயும் பொருட்டு சட்டமா அதிபர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அக்குழு கடந்த காலங்களில் பல தடவைகள் கூடி ஆராய்ந்துள்ளது. அண்மையிலும் ஒரு தடவை குறித்த குழு கூடியதாக தெரிவிக்கப்படுகின்றது. முதற்கட்ட திட்ட வரைபை தயாரிப்பதற்கு சிவில் சமூகங்களின் பங்களிப்பும் பெறப்பட்டிருந்தது.

இந்நிலையில் விரைவில் தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பான இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுவிடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டதும் அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படும் என்றும் பாராளுமன்றத்தில் உள்ள ஆலோசனைக் குழுவுக்கும் இதனை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் ஜெனிவா மனித உரிமை பேரவைக்கு அடிக்கடி அறிவிக்கப்படும் என்றும் இந்த விடயத்தில் அரசியல் விடயங்கள் கலக்கப்பட வேண்டிய அவசியமில்லையெனவும் இது நாட்டில் மனித உரிமைகளை ஊக்குவிக்கும் நோக்கில் செய்யப்படும் வேலைத்திட்டம் என்றும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் கலந்து கொண்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை சந்தித்து தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டம் தொடர்பில் பேச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## வணிக ஜோதி வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வணிக மாணவமன்றத்தினரின் வணிக ஜோதியின் 23 ஆவது இதழ் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு மன்றத்தலைவர் கஜேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள், வணிக பீடத்தின் நிதி முகாமைத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், சிறப்பு விருந்தினராக டி.எவ்.சி. வங்கியின் உதவிமுகாமையாளர் க.சுதாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

முதற்பிரதியை பழைய மாணவ சங்கத் தலைவரும் மாநகரசபை உறுப்பினருமான எஸ்.விஜயகாந் பெற்றுக்கொள்ளவுள்ளார். வணிக அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-3)

## ஆலோசனைக் கூட்டமும் கலந்துரையாடலும்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நகர அபிவிருத்தி ஆலோசனை சபைக்கூட்டமும் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலும் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு மன்றத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

# அக்கரைப்பற்று மாநகரசபையின் முதல்மேயராக சக்கி அதாவுல்லா

அக்கரைப்பற்று மாநகர சபையின் முதல் மேயராக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவின் புதல்வரான சக்கி அதாவுல்லா நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் சார்பில் அக்கரைப்பற்று மாநகர சபைக்கான தேர்தலில் போட்டியிட்ட சக்கி அதாவுல்லா 7 ஆயிரத்து 900 க்கு மேற்பட்ட அதிகூடிய வாக்குகளைப் பெற்றார்.

தற்போது சக்கி அதாவுல்லா, உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவின் அந்தரங்க செயலாளராக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இரண்டாவது அதிகூடிய வாக்குகளைப் பெற்ற முஹம்மட் றிஸான், பிரதி மேயராக நியமிக்கப்படலாம் என தேசிய காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்கரைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முஹம்மட் தவம் மற்றும் பிரதி தவிசாளர் முஹம்மட் சபீஸ் ஆகியோர் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்று முறையே 3 ஆம் மற்றும் 4 ஆம் இடங்களில் தெரிவு செய்யப்பட்டனர்.

அக்கரைப்பற்று பிரதேச சபை மாநகர சபையாக கடந்த ஜனவரி மாதம் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் தரமுயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# தரமற்ற தொடரூந்து இயந்திரங்கள் தொடர்ந்து இறக்குமதி

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் தரம் குறைந்தவை என தெரிவித்துள்ளபோதும் மேலும் இரு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் தொழில்நுட்ப ரீதியாக தரம் குறைந்தவை. எனவே அரசு அதன் இறக்குமதியை நிறுத்தியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தேர்தல் பிரசாரத்தின் போது தெரிவித்திருந்தார்.

ஆனால், கடந்த 16 ஆம் நாள் மேலும் இரு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக புகையிரத பணியாளர் சபையின் செயலாளர் சுமதிபால தெரிவித்துள்ளார்.

முன்னர் ஐந்து இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டதுடன் பின்னர் மேலும் இரண்டு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி ஆயிரத்து 200 மில்லியன் ரூபாய்களாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அடுத்தாண்டில் மலையகத்திலுள்ள சகல பகுதிகளுக்கும் மின்சாரம்


## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள குடியிருப்புகளுக்கு மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கு தோட்ட நிர்வாகத்தின் கடிதம் அவசியமில்லை என மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்றிருந்தாலே போதுமானது எனவும் அமைச்சர் தெரிவித்தார். தோட்டங்களிலுள்ள குடியிருப்புகளுக்கு மின் இணைப்பை பெற வேண்டுமாயின் தோட்ட நிர்வாகத்தின் கடிதம் கேட்கப்படுவதாக தெரியவருகிறது.

இதனால் தோட்டங்களில் குடியிருக்கும் சகலருக்கும் மின்சாரம் வழங்கும் திட்டத்தை 2012 இல் வெற்றி கொள்வதற்காக நாடு தழுவிய ரீதியில் 4 ஆயிரத்து 500 கிராமங்களில் 4 ஆயிரத்து 500 மின் மாற்றிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் பிரதான மின் வழங்கல்மூலம் மின்சாரத்தை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் அற்ற இன்னும் 40 ஆயிரம் குடும்பங்களுக்கு தீவுகள், மலைப் பிரதேசங்கள், வெகு தொலைவிலுள்ள கிராமங்களுக்கு சூரிய சக்தி, காற்றாலை மின் உற்பத்தி, சிறிய நீர்விழ்ச்சிகள் மூலம் மின் இணைப்புகள் வழங்க திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் கூறினார். (ஸ்ரீ-2)



மு/ஒலுமடு தமிழ் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் ந. சர்வேஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த. பங்கையச்செல்வன் , ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர், இராணுவ அதிகாரி, கிராம அலுவலர் ஆகியோரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தம் என்பது என்ன?

**மீண்டும் மீண்டும் துன்பம் ஏன்?**

'ஆனந்தம் என்பது வாழ்வின் இலக்கு அல்ல; அதுதான் வாழ்வின் இயல்பு' என்பதே யோக அறிவியலின் சாராம்சம். நம் வாழ்வில் முதலில் ஆனந்தத்தை உணரவேணடும்; அதன் பிறகுதான் மற்ற உயர்ந்த விடயங்கள் நமக்கு சாத்தியமாகும். இல்லையென்றால் எப்போதும், 'துன்பம் வந்துவிடுமோ' என்ற பயத்திலேயே வாழ்வீர்கள். வாழ்வில் என்ன வேண்டுமானாலும் எப்போது



வேண்டுமானாலும் யாருக்கும் நடக்கலாம் இல்லையா?

இந்த நொடியில் பிரபஞ்சத்தின் ஒரு அங்கமாக உள்ள யாரும், அடுத்த நொடியிலேயே கரைந்து காணாமல் போய்விடலாம். இது சாத்தியம்! 'இது நடந்து விடுமோ; அது நடந்து விடுமோ' என்ற பயமும் கவலையும் உங்களைத் துக்கத்திற்கும் மனப் பதற்றத்திற்கும் ஆளாக்குகிறது. கவலைகளை நீங்கள் பலவழிகளில் தீர்க்க முயன்றாலும் கூட, மீண்டும் மீண்டும் கவலையும் துயரமும் உங்களைத்தாக்குகின்றது.

வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலுமே, 'இது மட்டும் நடந்து விட்டால் போதும்... பிறகு எந்தக் கவலையும் இல்லை' என்று நீங்கள் பலவற்றை நினைத்தீர்கள். 'இந்த வேலை மட்டும் எனக்குக் கிடைத்து விட்டால் போதும்.. அவரோடு எனக்கு திருமணம் நடந்து விட்டால் போதும் ...இந்த மாதிரி ஒரு வீடுகட்டினால் போதும்..' இப்படிக் கவலையைத் தீர்த்து, ஆனந்தத்தை அள்ளித்தரும் விடயங்களாக எதை எதையோ நினைத்தீர்கள். ஆனால் என்ன ஆனது? நீங்கள் நினைத்ததையெல்லாம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தில் நடந்த பிறகும், அடுத்தடுத்து கவலைகள் வந்து கொண்டு தானே இருக்கிறது! ஏன் இப்படி... படைப்பில் ஏதாவது தவறு உள்ளதா? இல்லை..தவறு நம்மிடம்தான் இருக்கிறது.


உங்களுக்குள்... அதாவது உங்கள் உடல், மனம், உணர்வு இவற்றுக் கிடையில் இருந்த இயற்கையான இசைவு பாதிப்படைந்தாலும், நீங்கள் வாழ்வில் சேகரித்த சின்னச்சின்ன விடயங்களோடு உங்களை அடையாளப்படுத்திக் கொண்டதாலும்... உங்கள் உள்ளே உறையும் நித்தியமான ஆனந்தத்தை உணரமுடியாமல் தவிக்கிறீர்கள்.

**செயலின் பலன்**

வாழ்க்கை, ஒவ்வொரு கணத்திலும் உங்களுக்கு ஓர் ஆழமான ஆனந்த உணர்வினை ஊட்டிக் கொண்டே இருக்கிறது. நீங்கள் வாழ்வின் மூலத்தோடு ஐக்கியமாகி இருந்தால்,உங்களைச் சுற்றிநடக்கும் எந்த விடயமும் உங்களைப் பாதிக்காது. ஆனால் இப்போது நீங்கள் மேலோட்டமாக வாழ்வதால், சுற்றி நடக்கும் ஒவ்வொரு விடயமும் சூழ்நிலையும் உங்களை மோசமாகப் பாதிக்கின்றது.

இப்படி உங்களைச் சுற்றி நடக்கும் விடயங்களை ஓரளவிற்குத்தான் நீங்கள் தீர்மானிக்க முடியும். சில விடயங்கள் நீங்கள் விரும்பியபடி நடக்கும்; பல விடயங்களில் உங்கள் விருப்பம் ஒன்றாக இருக்க, அது வேறுவிதமாகத்தான் நடக்கும். வாழ்க்கையின் இயல்பே இப்படித்தான். எல்லாவற்றையும் உங்கள் விருப்பப்படி, நீங்கள் நினைத்தபடி மாற்றிவிட முடியாது. அப்படி மாற்றியமைப்பது சாத்தியம் என்றாகி விட்டால் அதன்பிறகு உங்களுக்கு வாழ்க்கையே பிடிக்காமல் போய் விடும் ஆபத்து உண்டு!

விரும்பியபடி ஒரே ஒரு விடயம் நடக்காமல் போய்விட்டாலும், உடனே நீங்கள் துக்கத்தில் ஆழ்ந்து விடுகிறீர்கள், இல்லையா? நீங்கள் இயல்பாகவே ஆனந்தமாக இருக்கும் போது, உங்களைச்சுற்றி எது நடந்தாலும்; அல்லது நடக்காவிட்டாலும் நீங்கள பாதிப்புக்கு ஆளாவதில்லை உங்கள் மனம் சோர்ந்து போவதில்லை. தொடர்ந்து சுறுசுறுப்பாக உங்கள் செயல்களை செய்து கொண்டிருப்பீர்கள். பலனைப் பற்றிக் கவலைப்படாமல் உங்கள் செயல்களில் முழுமையான ஈடுபாட்டை வெளிப்படுத்துவீர்கள் அல்லவா?



**ஆன்மீகம் 01**


இது ஏதோ பெரிய துறவு நிலையல்ல; நீங்கள் ஆனந்தமாக இருப்பதன் அடையாளம்தான் இது.

நீங்கள் ஒரு செயலைச் செய்வதே ஆனந்தமாக இருக்கத்தான். நீங்கள் ஆனந்தமாகவே செயலாற்றத் தொடங்கிவிட்டால், ஒரு செயலைத் தொடங்கும்போதே அதனுடைய பலனிலிருந்து நீங்கள் விடுவிக்கப் படுகிறீர்கள். ஆனால் ஆனந்தத்தை உங்கள் வாழ்வின் தன்மையாக உணராவிட்டால் செயலின் பலனிலிருந்து நீங்கள் ஒரு போதும் தப்பிக்க முடியாது.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலங்கையில் தமிழியல் ஆய்வு: பண்பாடு

**01**



**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

இலங்கையில் தமிழ் ஆய்வு பற்றிய வரலாற்று நூல்கள் அல்லது கட்டுரைகள் மிகச் சிலவென்றே கூறலாம். 1968 இல் வண. சேவியர் எஸ் தனிநாயகம் அடிகள் பதிப்பித்த Tamil Studies Abroad ( International Associotion of Tamil research Printed in malaysia) என்னும் நூலில் "Tamil Studies in Ceylon 1" என்னும் கட்டுரையினைப் பண்டிதர் கா.பொ. இரத்தினமும் "Tamil Studies; in Ceylon 11" என்னும் கட்டுரையைக் கலாநிதி சு.வித்தியானந்தனும் எழுதினார். ஏறக்குறைய 1964 வரை இலங்கையில் நடைபெற்று வந்த தமிழ் ஆய்வின் வரலாற்றினை இவ்விரு கட்டுரைகளிலும் இவ்விருவரும் எழுதியுள்ளனர். பண்டிதர் இரத்தினம் 1964 வரை தமிழ் மொழிமூலம் வெளியான ஆய்வுகளைத் தன்னுடைய கட்டுரையிலே தொகுத்துத் தந்துள்ளார். 1964 இற்கும் 2000 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பண்பாடு தொடர்பாக வெளிவந்த ஆய்வுகளை நிரைப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

இலங்கைத் தமிழர் பண்பாட்டின் பல்வேறு கூறுகளையும் ஒருமித்துக் கூறும் சில நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இந்த வகையில் எம். டி. இராகவனின்Tamil Culture in Ceylon - General Introduction (பெரும்பாலும் 1974 இல் வெளி யாகி இருக்கலாம்) என்னும் நூல் முதலிலே குறிப்பிடப்பட வேண்டியது. டி.ஜே. கனகரத்தினம் எழுதியTamils and Cultural Pluralisam in Srilanka (1978) க.த. திருநாவுக்கரசின் 'இலங்கையில் தமிழ் பண்பாடு' என்னும் நூல்கள் தமிழ் மக்களின் பண்பாட்டினை ஆராய் கின்றன. மட்டக்களப்புத் தமிழ் மக்களின் பண்பாட்டுக் கூறுகள் யாவற்றையும் உள்ளடக்கிய பல கட்டுரைகளின் தொகுதி நூலாகிய 'மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும்' எவ்.எக்ஸ்.சி. நடராசா அவர்களாலே தொகுத்து 1980 இல் வெளியிடப்பட்டது. வி.சி. கந்தையாவின் 'மட்டக்களப்பு கிராமிய கலாசாரம்' (1982), கே.எஸ். மெற்றாஸ் மெயிலின் 'அழிந்து செல்லும் வன்னிப் பிரதேசத்தின் பண்பாட்டுக் கோலங்கள்' (1983), கா.சிவத்தம்பியின் Towards Understanding of the culture and Ideology of the Tamils of Jaffna (1984) சு.வித்தியானந்தனின் 'இந்துக் கலாசாரம், சைவசமயம், சைவ சித்தாந்தம், திராவிடப்பண்பாடு என்பவை பற்றி கல்வியினையும் ஆழமான ஆராய்ச்சிகளையும் ஊக்குவிக்கும் பணிகள்' (1986), மௌலவி கே.எம்.எச். காலிதீனின் 'இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பாரம்பரியங்கள்' (1979), சாரல் நாடனின் 'மலைத் தமிழரின் மொழி, பண்பாடு பற்றிய ஒரு கண்ணோட்டம்' (1990)ஆகிய கட்டுரைகளும் கா.சிவத்தம்பி பதிப்பித்த இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும்(1993) என்னும் நூலும் குறிப்பிடப் படவேண்டியன. இஸ்லாமியரின் வரலாறு, பண்பாட்டுக்கூறுகள் என்பவற்றையெல்லாம் உள்ளடக்கியதாகப் பேராசிரியர் கலாநிதி எம்.எம் உவைஸ் அவர்களினால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்ட நூல் 'பிறைக்கொழுந்து' (1979)என்பதாகும். பொது வான பண்பாட்டு நூல்கள் என்ற வகையில் முக்தார்ஏ.முகம்மதுவின் இஸ்லாமிய நாகரிகம்(1975), நா. சுப்பிரமணியன் சௌல்யா எழுதிய இந்தியச் சிந்தனை மரபு(1993) என்பவற்றைக் குறிப்பிடலாம். 1983 கா.இந்திரபாலா **Jaffna** என்றொரு நூலைத் தொகுத்து வெளியிட்டார். இதில் **"Culture"** என்னும் இயல் இ.சண்முகதாசினால் எழுதப்பட்டது.

இலங்கைத் தமிழர் பண்பாடு பற்றிய ஆய்வுகளைப் பின்வரும் தலைப்புகளின் அடிப்படையிலே நோக்கலாம்:

1. சமயம்,
2. நம்பிக்கைகள்,
   சடங்குகள், நடைமுறைகள்,
3. பாரம்பரிய மருத்துவம்.

**2.1 சமயம்**

சமயம் தொடர்பாக வெளிவந்த எழுத்துக்களைப் பின்வரும் தலைப்புக்களிலே பகுத்து நோக்கலாம்.

1. இந்து-சைவ வரலாறு சமயம் பற்றிய பொதுவான நோக்கு
2. கோயில்கள்
3. சைவசித்தாந்தம்
4. கிராமிய வழிபாடு
5. கிறிஸ்தவம், இஸ்லாம்.

**2.1.1 இந்து -சைவ வரலாறு**

பண்டைக்கால இலங்கை இந்து, சைவசமயம் பற்றியும் வழிபாடு பற்றியும் எழுதப்பட்ட நூல்களும் கட்டுரைகளும் பின்வருவன:

ப. சர்வேஸ்வர ஐயர்:"Puranic Saivam in Ceylon during the Polonnaruwa Period" (1968)சி.க. சிற்றம்பலம் பண்டைய ஈழத்து யக்ஷ, நாக வழிபாடுகள்(1983), பௌத்தத்திற்கு முந்திய ஈழத்து இந்துமதம்(1983), ஈழமும் இந்து மதமும்-அநுராதபுரக்காலம்(1984), ஈழமும் இந்துமதமும்-பொலநறுவைக் காலம்(1984) ஈழமும் இந்து மதமும் பொலநறுவை அரசிற்குப்பிற்பட்ட போர்த்துக்கேயர் வருகைக்கு முற்பட்ட காலம். கி.பி. 1250-1505//(1984), கிழக்கிலங்கையும் ஆதி இந்துமதமும்(1987) இடைக்கால இந்துசமய வரலாறு பற்றியனவாக சி.பத்மநாதனின் இலங்கையில் இந்துமதம் ஆரியச்சக்கரவர்த்திகள்காலம், கி.பி.1250-1650 (1985)கட்டுரையும் ப. புஷ்பரட்ணத்தின் ஐரோப்பியர் ஆட்சிக்கு முற்பட்ட கால யாழ்ப்பாணத்து இந்துப் பாரம்பரியம் (1989) கட்டுரையும் ஆராய்கின்றன.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிபியாவில் போர்

# அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் கடாபியின் மாளிகை தரைமட்டம்

## 65 பேர் பலி; 150 பேர் காயம்

(டிரிபோலி)


லிபியாவில் 42 ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வரும் கடாபிக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களை ஒடுக்க கடாபி இராணுவ நடவடிக்கை மேற் கொண்டார். அதில் ஆயிரக்கணக்கான மக் கள் பலியாகினர். இருந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் புரட்சி படையினர் லிபியாவின் 2 ஆவது பெரிய நகரமான பெங்காசி உட்பட 4 நகரங்களை கைப்பற்றினர்.

அவற்றை மீட்க கடுமையான இராணுவ தாக்குதல் நடத்தப்பட்டது. குண்டு வீச்சின் மூலம் நகரங்களை கைப்பற்றிய இராணுவம் அடுத்த படியாக பெங்காசியை குறிவைத்தது. அங்கு தாக்குதல் நடத்த வேண்டாம் என அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள் ளிட்ட நாடுகள் கேட்டுக் கொண்ட போதும் கடாபி கேட்கவில்லை. எனவே அந்நாட்டு மக் களை காப்பாற்ற இராணுவ நடவடிக்கை மேற் கொள்ள ஐ.நா. பாதுகாப்பு சபையில் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது.

அதன் அடிப்படையில் அமெரிக்காவின் கூட்டு படைகள் நேற்று முன்தினம் அதி காலை இராணுவ தாக்குதலை தொடங்கின. பிரான் சின் ஜெட்போர் விமானங்கள் பெங்காசி நக ரின் முக்கிய இராணுவ நிலையங்களை குறி வைத்து குண்டுவீசி தாக்கின. அதேபோன்று அமெரிக்காவின் கூட்டு படைகள் டிரிபோலி, மிஸ்ரதா நகரில் கடாபியின் இராணுவ நிலை களின் மீது ஏவுகணைகளை வீசின. அதில் போர் விமானங்கள் மற்றும் இராணுவ டாங்கி கள் தீப்பிடித்து எரிந்தன.


ஏவுகணைத் தாக்குதலில் இதுவரை 65 பேர் பலியானார்கள். 150 பேர் படுகாயம் அடை ந்தனர். இருந்தும் டிரிபோலி, சிர்தே, ஜீவாரஹ் உள்ளிட்ட நகரங்களில் தாக்குதல் நடத்தப்ப ட்டு வருகிறது. இதற்கிடையே நேற்று முன்தி னம் இரவு அமெரிக்கா கூட்டுப்படையில் டிரிபோலியில் உள்ள ஜனாதிபதி கடாபியின் 4 அடுக்கு மாளிகையை குறி வைத்து ஏவுக ணை களை வீசி தாக்கின. அதில் அந்த கட்டடம் இடிந்து தரைமட்டமா னது.

இது கடாபியின் அதி கார மையமாக திகழ் ந்து வந்தது. இங்கு தான் அவர் தனது அலு வலகத்தை நடத்தி வந் தார். இராணுவ நட வடிக்கைகள் மேற்கொ ள்வது குறித்து அதிகா ரிகளுடன் ஆலோ சனை நடத்தி வந்தார். அமெரிக்க தாக்குலில் இருந்து கடாபியை காப் பாற்ற அவரது ஆதரவா ளர்கள் மனித கேடய மாக இருந்து செயற் பட்டு வருகின்றனர்.



எனவே இந்த ஏவுகணை தாக்குதலில் அவர்களில் பலர் பலியாகி இருக்கலாம் என தெரிகிறது. ஆனால் எத்தனை பேர் உயிரிழந் தனர் என்ற விபரங்கள் தெரியவில்லை. இத ற்கிடையே போர் நிறுத்தம் அறிவித்து அதை நடைமுறைப்படுத்தி வருவதாக லிபிய அரசு தெரிவித்துள்ளது. அதை அமெரிக்கா மறுத் துள்ளது. அது உண்மையில்லை. இன்னும் அங்கு வன்முறை சம்பவங்கள் நடைபெற்று வருகிறது என ஜனாதிபதி ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டாம் டோனிலன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கதிர்வீச்சை தடுக்க திணறி வரும் ஜப்பான் அணு உலைகளை மண்ணில் புதைக்க திட்டம்



ஜப்பானில் அணு உலைகளில் இருந்து வெளியேறு கதிர்வீச்சை தடுக்க திணறி வரும் ஜப்பான் அது முடியாமல் போனால் இறுதி நடவடிக்கை யாக கொங்கிறீட் கல வை களை பூசி அணு உலைகளை மண் ணில் புதைக்க திட்ட மிட்டுள்ளது.

ஜப்பானில் கடந்த 11 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனா மியால் மியாகி மாநிலம் பியூகுஷி மாடைச்சி அணு உலைகளில் ரியாக்ட ர்களை குளிர்விக்கும் முறைகள் அடுத் தடுத்து செயற்படாமல் போயின. அத னால் வெப்பம் அதிகரித்து 3 அணு உலைகள் வெடித்துச் சிதறின.

4 ஆவது அணு உலை தீப்பிடி த்து எரிந்தது. இந்த விபத்துக்களால் அணு உலையில் உள்ள யுரேனியம் மற்றும் புளுடோனியம் எரிபொருள் களிலிருந்து கதிர்வீச்சுகள் வெளி யேறின. அணுஉலைகளை குளிர்விக்க ஜப்பான் விஞ்ஞானிகள் எடுத்த முயற்சிகள் இதுவரை பயனளிக்கவில்லை. அதனால் உக் ரைனின் செர்னோபில் அணு உலை துயரம் நடந்தது போல பியூகுஷிமா அணு உலைக ளும் ஜப்பானியர்கள் அதிகள வில் பலியாக காரணமாகி விடுமோ என்ற அச்சம் நிலவுகி றது. கதிர்வீச்சை தடுக்க முடியாத நிலையில் கொங்கிறீட் கலவை மூலம் அணு உலைகள் மண்ணில் புதைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நிலநடுக்கம் மற்றும் சுனா மியில் பலியானோரின் அதிகாரபூர்வ எண் ணிக்கை 8 ஆயிரத்து 133 ஆக அறிவிக் கப்பட்டுள்ளது. 12 ஆயிரத்து 272 பேர் காணாமல் போய்விட்டதாக பதிவு செய்யப்பட் டுள்ளது. மியாகி மாகாணத்தில் மட்டும் 4 ஆயிரத்து 882 பேர் பலியாகியுள்ளனர். மேலும் ஒரு இலட்சம் சிறுவர், சிறுமியர் இடம் மாறியுள்ளதாக அந்நாட்டு சிறுவர் பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ஜப்பானின் புகுஷிமா மாகா ணத்தில் இருந்து பிற பகுதிகளுக்கு விநி யோக மாகும் பால் விற்பனைக்கு அந்நாட்டு சுகாதா ரத்துறை அமைச்சகம் தடை விதித்துள்ளது.

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப் பட்ட அவரை மற்றும் மொச்சை காய்கறிக ளில் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கதிர்வீச் சின் அளவு அதிகமான இருப்பதாக தைவான் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)




## கடாபிக்கு குறி? அமெரிக்கா மறுப்பு

லிபிய ஜனாதிபதி முகமது கடாபி யின் 32 ஆண்டு கால சர்வாதிகார ஆட்சியை கண்டி த்து அந்நாட்டு மக்கள் கடந்த ஒரு மாத காலமாக கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். இந் நிலையில் அப்பாவி மக்கள் மீது கடாபி ஆத ரவு படைகள் அத்துமீறி தாக்குதல் நடத்துவ தாக கூறி அமெரிக்கா கண்டனம் தெரிவித்து வந்தது.

அமெரிக்காவின் எச்சரிக்கையை அசட்டை செய்த கடாபிக்கு பதிலடி கொடுத்து வருகி றது. அமெரிக்க படைகள் ஜனாதிபதி கடாபி யின் குடியிருப்பை குறிவைத்து குண்டு மழை பொழிந்தது. இதில் ஜனாதிபதி இல்லததில் கூடியிருந்த அவரது ஆதரவாளர்கள பலர் பலியாகினர். ஜனாதிபதி கடாபியை மட்டும் குறி வைத்து அமெரிக்கா தாக்குதல் நடத்து வதாக கடாபி தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆனால் இந்த குற்றச்சாட்டை திட்டவட் டமாக மறுத்துள்ள அமெரிக்கா ஜனாதிபதி மாளிகையை சுற்றி அதீத பலத்துடன் இருக் கும் இராணுவ படைகளை கட்டுப்படுத்து வதற்காக மட்டுமே ஜனாதிபதி மாளிகை அருகே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக விளக்கமளித்துள்ளது. (ஸ்ரீ-2)

## ஜப்பான் சுனாமி எதிரொலி

# அணுமின் உற்பத்திக்கு பல நாடுகள் எதிர்ப்பு; மாற்று வழிகளில் மின்உற்பத்தி செய்ய ஆர்வம்

ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம், சுனாமியால் அங்குள்ள அணு உலைகள் வெடித்து, கதிர் வீச்சு அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஜப் பான் மட்டுமில்லாமல் அந்நாட்டை அண்டி யுள்ள இதர நாடுகளும் கதிர்வீச்சு பயத்தில் சிக்குண்டுள்ளன. அணுமின் உற்பத்தியால் ஏற்பட்டுள்ள இடர்பாட்டை கருத்தில் கொண்டு பல நாடுகள் தற்போது மரபுசாரா எரிசக்தி திட் டங்கள் வாயிலாக, மின் உற்பத்தி மேற்கொள் வதில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளன.

இது குறித்து சர்வதேச நிலையான எரி சக்தி பயிலகத்தின் தலைமை இயக்குநர் ஜி.எம்.பிள்ளை கூறியதாவது,

அணுமின் உற்பத்தி குறித்து பல நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வந்தபோதிலும் இந்த மின் உற்பத்திக்கு பல நாடுகள் அதிக முக்கி யத்துவம் அளித்து வந்தன.

தற்போது ஜப்பானில் ஏற்பட்டுள்ள அணு உலை வெடிப்பு சம்பவங்களால் உலக நாடு கள் மாற்று வழிகளில் மின் உற்பத்திசெய்வது குறித்து சிந்திக்கத் தொடங்கியுள்ளன. அனல் மின் உற்பத்தி திட்டங்களும் நிலக்கரி பற்றாக் குறையால், மின் உற்பத்தி இலக்கை எட்ட முடியாமல் உள்ளன. மேலும் நிலக்கரியின் விலை, தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதன் இருப்பு நிலை எத்தனை காலத்திற்கு வரும் என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. அண் மைக்காலத்தில் இதன் விலை20 மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து காற்றாலை மின் திட்டங்கள் 2011 என்ற அமைப்பின் ஆலோசகரும், சுஸ்லான் எனர்ஜி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான துள்சி டாண்டி கூறியதாவது,

குறைந்த செலவில் அதிகளவில் மின் உற்பத்தி செய்யும் வகையிலான மரபுசாராத மின் திட்டங்கள் நம் நாட்டிற்கு மிகவும் அவசி யமாக உள்ளன. இதனால் சுற்றுச்சூழல் பாது காக்கப்படுவதுடன் மக்களுக்கும் எவ்வித தீங் கும் ஏற்படுவதில்லை. இது போன்ற மின் திட் டங்களால் உலக வெப்பமயமாதலும் தடுக்கப் படுகிறது.

சுற்றுச்சூழல் பாதிப்புகளால் இந்தியாவும் சீனாவும் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றன. இச்சூழ்நிலையில் மரபுசாரா எரி சக்திதிட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக் கப்பட வேண்டும் என துள்சி டாண்டி கூறி னார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்




(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்)

**யோசித்து செயல்பட்டால் யோகம்!**

**நடந்து முடிந்த சம்பவங்களைப் பற்றி கவலைப்படாமல், நடக்க வேண்டிய சம்பவங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும் கும்ப ராசி நேயர்களே!**

நீங்கள் நிர்வாகத் திறமை அதிகம் பெற்றவர்கள். மனப்பக்குவத்தை வாழ்வின் மையப் பகுதியில் பெறுவீர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை இளமையிலேயே உங்கள் இதயத்தில் பதித்து வைத்திருப்பீர்கள். நல்ல நண்பர்களை அதிகம் பெற்ற நீங்கள், அவர்களுக்கு அறிவுரை சொன்னால், உங்களை விட்டு விலகி விடுவார்கள். காரணம், அது உங்கள் இராசி அமைப்பு.

உங்களுக்கு இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே அஷ்டமத்தில் சனிவக்ரம் பெறுகிறார். அஷ்டமாதிபதி புதன் நீசம் பெறுகிறார். எனவே, வரவும் – செலவும் சமமாகும். வருமானம் திருப்திகரமாக இருந்தாலும், மனநிம்மதி குறையும். மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பால் நீங்கள் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டாலும், வீட்டில் உள்ளவர்களின் ஒத்துழைப்பு எதிர்பார்த்தபடி இருக்குமா? என்பது சந்தேகம் தான்.

என்ன இருந்தாலும், அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்திற்கு பரிகாரங்கள் தேவை. சனியை வழிபட்டால்தான் சந்தோஷங்கள் வந்து சேரும். ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருப்பதோடு, அன்னதானம், வஸ்திர தானங்களில் ஆர்வம் காட்டினால், எண்ணங்கள் எல்லாம் எளிதில் நிறைவேறும். இனிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும்.

வாக்கு, தனம், குடும்பம் என்று வர்ணிக்கப்படும் இடத்தில் குரு சஞ்சரிக்கிறார். எனவே கொடுத்த வாக்கை காப்பாற்றி விடுவீர்கள். குடும்ப சுகம் கூடும். உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவீர்கள். சந்திர பலத்தால் பிள்ளைகள் வழியிலும் நல்ல தகவல் வந்து சேரும்.

மார்ச் 23 நாளை கும்ப இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 4, 9க்கு அதிபதி இராசியில் சஞ்சரிக்கும் பொழுது, சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். தாய்வழி ஆதரவு பெருகும். வாகன யோகத்தோடு வாழ்க்கைத்துணை வழியிலும் யோகம் வரும். பயணங்கள் அதிகரிக்கும். கடிதம் கனிந்த தகவல்களைக் கொண்டு வந்து சேர்க்கும். தந்தை வழியில் இதுவரை காட்டாத அன்பு இப்பொழுது கிடைக்கும். பூர்வீக சொத்துக்களால் இலாபம் உண்டு.

எதிர்வரும் 24ஆம் மீன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 3, 10க்கு அதிபதி தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளுக்கு பலன் கிடைக்கும். ஆனால், அதே நேரத்தில்

## சிவல்புரி சிங்காரம்

செவ்வாய், சனியின் பார்வை இருப்பதால், உடன்பிறப்புகளால் தாக்குதல் ஏற்படலாம். உறவினர் பகை உருவாகலாம். ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும்.

இம்மாதம் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ள, கந்தன் வழிபாடும், மந்தன் வழிபாடும் உங்களுக்கு அவசியம் தேவை.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உடன்பிறப்புகள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். இருப்பினும், அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், திடீரென மனம் மாறி மாற்று சகோதரர்களுடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு உண்டு. எனவே, உங்கள் அனுசரிப்பு தான் ஆதாயத்தைக் கொடுக்கும்.

குடியிருக்கும் வீட்டாலும், குழந்தைகளாலும் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். எனவே, குழந்தைகளை மாதத்தின் பிற்பகுதியில் நேரடி கண்காணிப்பில் வைத்துக் கொள்வது நல்லது. பொது வாழ்வில் திடீரென பொறுப்புகள் மாற்றப்படலாம். முறையான ஆலய வழிபாடு முன்னேற்றத்தை வழங்கும்.




(பூரட்டாதி4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

**பரிகாரத்தால் பலன் கிடைக்கும் நேரம்!**

**வருபவர்களை உபசரிப்பதில் வல்லவர்களாக விளங்கும் மீன ராசி நேயர்களே!**

நீங்கள் மற்றவர்களின் வார்த்தைக்கு மதிப்பு கொடுப்பீர்கள். கற்ற கல்வியைக் காட்டிலும், பெற்ற அனுபவமே உங்களுக்கு பலன் கொடுக்கும். உழைப்பால் உயர்ந்து உன்னத நிலையைப் பெற்றவர்களின் பட்டியலில் இடம் பிடிப்பீர்கள். சடங்கு, சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை வைத்திருப்பவர்களும் நீங்கள்தான். குடும்ப பொறுப்புகள் முழுவதையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் உங்களுக்கு இருப்பதால், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் உங்களைப் பாராட்டியே காரியங்களைச் சாதித்துக் கொள்வர்.

உங்களுக்கு இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, குருச்சந்திர யோகமும், புத–ஆதித்ய யோகமும் அமைந்துள்ளதால், மாதத் தொடக்கம் மகிழ்ச்சிகரமானதாகவே இருக்கும். தொழில், உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடியே வருமானம் வந்து சேரும்.

பத்தாமிடத்து இராகுவால் கூட்டாளிகள் உங்களுக்கு கூடுதல் இலாபத் தைத் தர முன்வருவர். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். சென்ற மாதத்தில் நடைபெறாத காரியங்கள் துரிதமாக நடைபெறும்.

சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. இருப்பினும், சனி வக்ர கதியில் இருப்பதாலும், குருவின் பார்வை அதன் மீது பதிவதாலும், அப்போதைக்கு அப்போது பரிகாரங்களை மேற்கொண்டால் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் எந்த தடையும் ஏற்படாது. குரு வழிபாடும், சனி வழிபாடும் உங்களுக்கு குதூகலத்தை வரவழைத்துக் கொடுக்கும்.

4, 7க்கு அதிபதியான புதனுடன் ஆறுக்கு அதிபதி சூரியன் கூடியிருப்பதால், பழைய கடன்சுமைகள் குறைந்தாலும், புதிய கடன் சுமைகளும் உருவாகலாம். சங்கிலித் தொடர் போல, கடன்சுமை ஏற்படுவது உங்களைப் பொறுத்த வரை நன்மை தான்.

சனியின் ஆதிக்க காலத்தில் இதன்மூலம் வரும் வருமானத்தையும், விரயத்தையும் ஒழுங்கு செய்து கொள்ளலாம். பிரிந்து சென்ற உறவினர்கள் வந்திணைவர். மாமன், மைத் துனர் வழியில் நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்.

நாளை 23ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 8க்கு அதிபதி 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

திறமை மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து உதவி செய்ய முன் வருவர். இளைய சகோதர வழியில் இருந்த தகராறுகள் அகலும். கூட்டுமுயற்சியில் திடீரென மாற்றங்களை ஏற்படுத்துவீர்கள்.

இக்காலம் தான் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய காலமாகும். எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. குறிப்பாக, ஆரோக்கியத்திலும் அக்கறை காட்ட வேண்டியது அவசியமாகும். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும்.

இலாபாதிபதி சனி வக்ரகதியில் இருப்பதால், பங்குதாரர்களிடம் பக்குவமாக நடந்து கொள்வது நல்லது. பொதுவாக, இக்காலத்தில் சுயஜாதக ரீதியாக ஆராய்ந்து பரிகாரங்களைச் செய்து கொள்வதன்மூலமே பலன் பெறலாம்.

இம்மாதம் குரு தெட்சிணாமூர்த்தியை வியாழன்தோறும் வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டவேண்டிய மாதமாகும். அடுத்தவர் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் அதிக பிரயாசை எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பிள்ளைகள் வழியில் அதிக கவனம் செலுத்துவது நல்லது.

உடன்பிறப்புகள் ஒருசில சமயங்களில் உங்கள் சொற்களை மீறி நடக்கலாம். அதற்காக கோபப்படுவதை தவிர்ப்பது நல்லது. மாதக்கடைசியில் பூமி விற்பனையால் இலாபம் உண்டு. விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புகிட்டும்.

(முற்றும்)







யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய வளாகத்தினுள் தென்னிந்திய பிரபல சிற்பி புருஷோத்தமனால் வடிவமைக்கப்பட்ட கலைமகள் திருவடிவத்தினையும் அமெரிக்க ஹவாய் ஆச்சிரமத்தில் இருந்து வருகை தந்த ரிஷிதொண்டுநாத சுவாமிகளும் அன்னையாரும் மங்கல விளங்கேற்றுவதையும் அருகில் அதிபர் திருமதி குககுமாரி விஜயரகுநாதன், உப அதிபர் திருமதி பஞ்சலிங்கம், சிறப்பு விருந்தினரான பொறியியலாளர் ஜெயசிங்கம் மற்றும் ஆசிரியர் குழாம் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிபுகள்

நல்லூர் கோட்டமட்டபாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி முடிபுகள் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராசாவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

**15 வ.கீ.பெண்கள்**

4X400மீற்றர்

யாழ்.இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, முத்துத்தம்பி ம.வி

**13 வ.கீ.பெண்கள்**

200மீற்றர்

ஆர்.நிறோஜினி (கனகரத்தினம் ம.ம.வி), ஜெ.ஜெனனி(செங்குந்தா இந்துக் கல்லூரி), ஜி.கிஷாயினி(யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

**15 வ.கீ.பெண்கள்**

200மீற்றர்

எ.நாகலோஜினி(கனகரத்தினம் ம.ம.வி), எஸ்.நிதர்சனா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பி.விதுஷா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

400மீற்றர்

எ.நாகலோஜினி(கனகரத்தினம் ம.ம.வி), யு.தீபிகா(கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெ.துஷாந்தி(கனகரத்தினம் ம.வி)

தட்டெறிதல்

கே.ஜெனரஞ்சனி(கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.லோஜிகா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ்.கௌதமி(யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

ஈட்டி எறிதல்

ஈ.யோகவிதுர்ஷா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ்.நிலோஜி(கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டிதா), பி.சிவபிரமி(யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

நீளம் பாய்தல்

வை.கனிஸ்ரா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), என்.திவ்யா (கோ.இராமகிருஷ்ண மெதடிஸ்), கே.நிரோஜா (உயரிப்புலம் மெதடிஸ்த த.க.பா)

**17 வ.கீ.பெண்கள்**

200மீற்றர்

வி.ஜானுஷா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வி.தனுசிகா(கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.மதுஜா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

400மீற்றர்

வி.தனுசிகா(கொக்குவில் இந்துக் கல்லூரி), வி.ஜானுஷா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ்.ஜெயகௌரி(கொக்குவில் இந்துக் கல்லூரி)

நீளம் பாய்தல்

வி.ஜானுஷா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி),எஸ்.ஜெயகௌரி(கொக்குவில் இந்துக் கல்லூரி),எஸ்.ரஜினி(முத்துத்தம்பி ம.வி)

உயரம் பாய்தல்

ஆர்.தரசுதா(கொக்குவில் இந்துக்கல்லூரி), கே.துஸ்யந்தி(கொக்குவில் இந்துக் கல்லூரி), வி.சுகிர்தா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

முப்பாய்ச்சல்

ஆர்.தரசுதா(கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.சாம்பவி(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வி.ருக்சனா(பெரியபுலம் ம.வி)

ஈட்டி எறிதல்

வி.வக்சனா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வி.அமிர்தாம்பிகை (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எம்.வினுஷ்ரா(கோண்டாவில் இராமகிருஷ்ணா)

4X100மீற்றர்

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி

4X400மீற்றர்

(கொக்குவில் இந்துக் கல்லூரி), (கனகரத்தினம் ம.ம.வி), (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

**19 வயதின் கீழ் பெண்கள்**

100மீற்றர்

எஸ். தீபிகா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஏ.விதுரா(கொக்குவில் இந்துக் கல்லூரி), என். லாவண்யா(கனகரத்தினம் ம.ம வி)

200மீற்றர்

ஆர். சிவாஜினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஏ.விதுரா(செங்குந்தா இந்துக்கல்லூரி),என். லாவண்யா(கனகரத்தினம்ம.மவி)

400மீற்றர்

பி.சுகந்தினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஏ.விதுரா(கொக்குவில் இந்துக் கல்லூரி),பி.நிறோஜிகா(கனகரத்தினம் ம.ம.வி)

800மீற்றர்

ரீ.அம்சத்வனி(கனகரத்தினம் ம.ம.வி), ஆர்.துஷாரா (யாழ் இந்து மகளிர் கல்லூரி), பி. கவிதா (கனகரத்தினம் ம.ம.வி)

1500மீற்றர்

ரீ.அம்சத்வனி(கனகரத்தினம் ம.ம.வி), எஸ்.ராகவர்த்தனி(யாழ் இந்து மகளிர் கல்லூரி), எஸ்.கம்சவதனா(கொக்குவில் இந்துக்கல்லூரி)

(தொடரும்)

# மஹோற்சவம்

அல்வாய் மேற்கு தேவரையாளி கண்ணகை அம்பாள் தேஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இதில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு 108 சங்காபிஷேகமும் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் தொடர்ந்து 12 மணிக்கு கொடி இறக்கம், திருவூஞ்சல் என்பனவும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை 9 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும்நடைபெறும் எனவும் கண்ணகை அம்பாள் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-48)

# ஜப்பானுக்கு மூன்று மில்லியன் தேயிலைப் பொதிகள் அன்பளிப்பு

ஜப்பானில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கவென 60 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான 03 மில்லியன் தேயிலைப் பொதிகளை இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று கையளித்துள்ளது.அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் சங்கத்தின் தலைவர் ஜயந்த கேரகல இப் பொதிகளை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இது தொடர்பில் நடைபெற்ற வைபவத்தில் அமைச்சர் மஹிந்த இலங்கைத் தூதுவர் அட்மிரல் வசந்த கரன்னாகொட, இலங்கைத் தேயிலைச் சபையின் தலைவர் சுசந்தரத் நாயக்க மற்றும் தேயிலை ஏற்றுமதிச் சங்கத்தின் பதில் தலைவர் ரோஹன் பெர்னாண்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ)

# உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக முஸ்லிம் பெண் தெரிவானார்



நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்மூலம் கிழக்கின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக முதன் முறையாக முஸ்லிம் பெண் ஒருவர் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

காத்தான்குடி நகர சபைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட சல்மா ஹம்ஸா தெரிவாகியுள்ளார்.

இவர் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா வின் சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் காத்தான்குடி நகர சபை தேர்தலில் ஆயிரத்து 235 வாக்குகளை பெற்று ஸ்ரீலங் கா முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலில் முதலிடத் தை பெற்றுக்கொண்டார்.

சுசில் பிரேமஜயந்த கல்வி அமைச்சராக செயற்பட்ட காலத்தில் கல்வியமைச்சின் கிழக்கு மாகாண இணைப்பாளராக செயற் பட்ட இவர் பெண்களின் வலுவூட்டல் மற்றும் அபிவிருத்திக் குமான அமைப்பின் தலைவியுமாவார்.

(ஸ்ரீ-2)

# மிகவிரைவில் லிபியாவின் நிலை இலங்கையிலும் ஏற்படலாம்

## பொன்சேகா எச்சரிக்கை

(கொழும்பு)

மிக விரைவில் லிபியாவின் நிலை இலங்கையிலும் ஏற்படலாம் என்று ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா எச்சரித்துள்ளார்.

அவரைப் பார்வையிடுவதற்காக நேற்று வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவிடமே அவர் மேற்படி எச்சரிக்கையை தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மேற்கொண்டு வரும் மக்கள் விரோதப் போக்குகள் காரணமாக நாட்டு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் மட்டுமன்றி வாழ்வதற்கான சுதந்திரமான சூழலும் பறிபோய் விட்டது.

அதன் காரணமாக, மிக விரைவில் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக பொது மக்கள் கிளர்ந்தெழுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள சரத் பொன்சேகா மக்கள் அப்படிக் கிளர்ந்தெழுவதைத் தடுக்கவோ அல்லது கிளர்ந்தெழும் மக்களை அடக்கவோ யாராலும் முடியாமலும் போகும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)



Ever Shine Kids World &Education Centre முன்பள்ளி சிறார்களின் பேச்சுத்திறன்காண் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பாண்ட் வாத்திய சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். செட்டித்தெரு மெதடிஸ்த மிசன் கல்லூரி அதிபர் செல்வி சி.மாணிக்கம் , பொறுப்பாசிரியர் திருமதி ஜெ. சறோஜினியால் மலர் மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதையும் , பெற்றோர் ஒருவர் உரையாற்றுவதையும். படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிசபை புதிய தலைமைத்துவத்தின் பெயர்களை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூரட்சி சபைகளின் புதிய தலைவர் மற்றும் உபதலைவர் பதவிகளுக்கான பெயர்களை நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் சகல அரசியல் கட்சிகளையும் கோரியுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இம்முறை விருப்பு வாக்கு அடிப்படையில் அன்றி கட்சியின் தலைமைத்துவத்தின் தீர்மானப் பிரகாரம் தலைவர், உப தலைவர்களை நியமிக்க முடிவெடுத்துள்ளது.

அதற்கான கலந்துரையாடலுக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு நாளை புதன்கிழமை கொழும்பில் ஒன்று கூடவுள்ளது.

ஆயினும் அதன் பங்காளிக்கட்சிகளின் சார்பில் நிறுத்தப்பட்டிருந்த வேட்பாளர்கள் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றிருக்கும் பட்சத்தில் அவர்களே தலைவர்களாக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புள்ளதாக தெரிய வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி வழமைபோன்று கூடுதல் விருப்பு வாக்கின் அடிப்படையில் தலைவர், உபதலைவர் பதவிகளை நிரப்பவுள்ளது.

தமிழரசுக்கட்சி கைப்பற்றியுள்ள உள்ளூராட்சி சபைகளின் நிலை தொடர்பாக அதன் மத்திய குழு கூடி முடிவெடுக்கவுள்ளது.(ஸ்ரீ-2)

# இலங்கையின் முதலாவது நிலக்கரி மின்னுற்பத்தி நிலையம் இன்று திறப்பு

நுரைச்சோலையில் அமைக்கப் பட்டுள்ள இலங்கையின் முதலாவது நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று திறந்து வைக்கவுள்ளார்.

இலங்கையின் மொத்த மின்சாரத் தேவையில் 17 சதவீதத்தை அதாவது 300 மெகாவோட் மின்சாரத்தை இந்த மின் நிலையம் இன்று தொடக்கம் உற்பத்தி செய்யும்.

இதன் இரண்டாம் கட்ட உற்பத்தி ஆரம்பிக்கப்படும்போது மேலும் 600 மெகா வோட் மின்சாரம் உற்பத்தி செய்யப் படுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சீனாவின் உதவித்திட்டத்தின் கீழ் இந்த நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணிகள் கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்துக்கு சீனா 455 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் இலங்கை 300 மில்லியன் ரூபாவையும் ஒதுக்கியுள்ளன.

(ஸ்ரீ-2)

# கொழும்பு ஹில்டன் விடுதி விற்பனை செய்யப்படமாட்டாது

## பிரதான முகாமையாளர் தெரிவிப்பு

இந்தியாவின் டெல்டா குருப் நிறுவனத்திற்கு கொழும்பு ஹில்டன் விடுதியை விற்பனை செய்ய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக வெளியாகியுள்ள தகவல்கள் உண்மைக்கு புறம்பானது என ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) நிறுவனத்தின் பிரதான முகாமையாளர் சுதர்ஷன் ஸ்ரீரயன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள பிரதான கசினோ சூதாட்ட நிறுவனமான டெல்டா குருப் நிறுவனத்திற்கு ஹில்டன் விடுதி விற்பனை செய்யப்பட உள்ளதாக இந்திய ஊடகங்கள் கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தன.

குறித்த நிறுவனம் ஹில்டன் விடுதியில் கசினோ சூதாட்ட மையம் ஒன்றை ஏற்படுத்த இருப்பதாகவும் அதற்கான அனுமதியை பெற விண்ணப்பித்து உள்ளதாகவும்இந்திய ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

ஹில்டன் விடுதி அரசாங்க நிறுவனத்திற்கு சொந்தமானது எனவும் அதனை விற்பனை செய்ய போவதில்லை எனவும் சுதர்ஷன் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் தென்னிந்தியாவில் கைது

(கொழும்பு)

தென்னிந்தியாவில் வைத்து விடுத லைப் புலிகள் முக்கியஸ்தர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளதாக இந்தியப் புலனாய்வு வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது தமிழ் நாட்டின் முக்கிய நகரம் ஒன்றில் மறைந்திருந்த அவரைப்ப ற்றிய இரகசிய புல நாய்வு விசாரணைகளின் பின்பே பிரஸ் தாப நபர் கைது செய்யப் பட்டுள்ளதாக இந்திய வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறன்றது.

பிரஸ்தாப நபர் தென்னிந்தியாவில் வாழும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் குறித்த தகவல்களைத் திரட்டிக் கொண்டிருந்ததாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

ஆயினும் அவர் தற்போது விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுடன் தொடர்பு பட்டிருக்கிறாரா அல்லது விடுதலைப் புலிகள் அமைப்பை மீளியங்க வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாக என்பன குறித்து இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை .

(ஸ்ரீ-2)

# மாதாந்த ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு (சொண்ட்) நிறுவனத்தின் மாதாந்த ஆய்வரங்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு 60 அரசடிவீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சொண்ட் செயலகத்தில் நடைபெறவுள்ளது என்று சொண்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் கற்றோர் சமூகத்தில் சிந்தனையை தூண்டவும் அபிவிருத்தியில் அவர்கள் பங்களிப்பை பெறும் பொருட்டு எமது மாவட்டம் தழுவிய பொதுப் பிரச்சினைகளை கருப்பொருளாகக் கொண்டு மாதாந்தம் ஆய்வரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

இவ் ஆய்வரங்கில் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் விவசாயத்துறையின் பங்கு எனும் கருப்பொருளில் விவசாயத்திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் எஸ். சிவகுமார் ஆய்வுரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் பங்குபற்றுநரின் கலந்துரையாடலுக்கும்ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-3)

# தையல் பயிற்சிநெறி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் மகளிருக்கான தையல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

சங்க எல்லைக்குட்பட்ட மகளிர் தமது சுய விபரக் கோவையை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் சங்கச் செயலாளரிடம் அல் லது பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கும் படி சங்கத்தலைவி திருமதி லோ.நவரட்ணம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

# சகல உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலின் பின்னரே தேர்தல்கள் ஆணைக்குழு நியமனம்?

(கொழும்பு)

ஒத்திவைக்கப்பட்டுள்ள மற்றும் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்க ளுக்கான தேர்தல்கள்யாவும் நிறைவடைந்த பின்னரே தேர்தல் ஆணைக்குழுவை நியமிப் பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிய வருகிறது.

கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் அரசியல் அமைப்பின் 18 ஆவது திருத்தத்திற்கு அமைவாகவே தேர்தல்கள் ஆணைக் குழுவை நிறுவுவதற்கு அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருந்தது.

தற்போதுள்ள நிலைமையில் சகல மன்றங்களுக்கான தேர்தலும் நிறை வடைந்த தன் பின்னரே தேர்தல் ஆணைக்குழுவை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தேசியபொலிஸ் ஆணைக் குழு, அரச சேவைகள் ஆணைக் குழு மற்றும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு ஆகிய மூன்று ஆணைக் குழுக்களுக்குமான பெயர் விபரங்களை பாராளுமன்ற சபையிடம் கையளிக்கப் படவிருக்கின்றன.

அரசியல் அமைப்பின் 18 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றிக் கொள்ளப்பட்டதன் பின்னர் பாரளுமன்றப் பேரவைக்கு பிரதமரும் எதிர்க் கட்சிதலைவரும் தங்களுடைய பிரதிநிதிகளை நியமித்தனர்.

அவ்விருவரும் அந்த பிரதிநிதித்து வத்தை ஏற்றுக் கொள்வதற்கு மறுத்தமையை அடுத்தே அவ்விருவரும் இன்னும் இருவரை நியமித்தனர்.பாராளுமன்றப் பேரவை ஜனாதிபதியினால் முழுமையாக நியமிக்கப்பட்டதை அடுத்தே ஆணைக் குழுவிற்கான உறுப்பினர்கள் பாராளுமன்றப் பேரவை யில் நியமிக்கப்பட விருக்கின்றனர். (ஸ்ரீ-2)

ST. JOHN AMBULANCE SRI LANKA

**வைத்தியசாலை நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆட்சேர்ப்பு**

*யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்.ஜோன் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆண், பெண் இருபாலாரும் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.*

*நாள் ஒன்றிற்கு ஆண் பராமரிப்பாளர் ஒருவருக்கு ரூபா 1000/- வழங்கப்படும். இச் சேவையில் சேர விரும்புவோர் எதிர்வரும் 27.03.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள சென்.ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு நேரில் சமுகம் தரவும். மேலதிக விபரங்களுக்கான தொடர்பு இலக்கம் -021 222 3166*

**அவசர அம்புலன்ஸ் சேவைக்கான இலக்கம்: 021 321 4444**

(4202)

*சென்.ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்டம்*



சண்டிலிப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக் கிடையிலான விளையாட் டுப் போட்டி அண்மையில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதனையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வையும் வெற்றி பெற்ற மாணவர் களுக்கான பரிசில்களை வலிகாம வலய கல்விப்பணிப்பாளர் எஸ். இராஜேந்திரன் வழங்கிக் கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம் (படங்கள்: என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் காலத்திலும் மோகம் உங்கள் மனதை வெல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.
*- ஓர் அறிஞர்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மாணவர்களே கிரிக்கெட்டில் மோகம் கொள்ளாதீர்கள்!

எங்கள் மாணவர்கள் தொடர்பில் எமக்கு மிகுந்த கவலைகள் உண்டு. அதனை புறவயமான கவலை, அகவயமான கவலை என்று கூட பிரித்துக் கொள்ளலாம்.

இங்கு புறவயமான கவலை என்பது எங்கள் மாணவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்கின்ற நிலைமை.

உழுது விதைத்து விவசாயத்தில் முன்னேற்றம் கண்டிருந்த அவர்களின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டதால் எல்லாவற்றையும் இழந்து வெறும் குடிசைகளில் அவர்களின் வாழ்வு தொடர்வதைப் பார்க்கும் போது இதயம் வெடிக்கும் போல் உள்ளது.

இன்னமும் எத்தனையோ மாணவர்கள் பெற்றாரை, உறவுகளை இழந்த சோகத்தில் வெறுப்பு நிலை அடைந்து காணப்படுகின்றனர். இதனோடு அங்கவீனம் ஒருபுறம்.

ஓடித்திரிந்து கல்வியை பெறுமதியாக மதித்து படித்த வன்னி மாணவர்களுக்கு ஏற்பட்ட அவலம் கண்டு ஆறுதலடைய முடியாத சோகத்தில் இருக்கும் வேளையில்,

இன்னொரு புறத்தில் யாழ்ப்பாண மாணவர்களிடையே 'கிரிக்கெட்' விளையாட்டு மோகம் பித்தம் சிரசுக்கு ஏறியது போல காணப்படுகிறது.

விளையாட்டு மாணவர்களின் ஆரோக்கியம் உட்பட ஒற்றுமை, நம்பிக்கை என்ற அடிப்படை ஆளுமைப் பண்புகளை தரவல்லது என்பதில் இருவேறு கருத்திற்கு இடமில்லை.

அதேநேரம் கிரிக்கெட் விளையாட்டில் கொண்டிருக்கக்கூடிய ஆர்வம் என்பதற்கும் ஓர் எல்லையுண்டு.

ஆனால் யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் விளையாட்டை சாட்டாகக் கொண்டு மாணவர்களுக்கு இது உகந்ததல்ல என்று கூறுமளவிற்கு அவர்கள் வீதிகளில் நடந்து கொண்டனர். இதனைப் பார்க்கின்ற போது ஏற்படுகின்ற கவலை அகவயமானதாகும்.

அன்புக்குரிய மாணவர்களே! நாம் கிரிக்கெட் விளையாட்டிற்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் மாணவர்களாகிய உங்களிடம்தான் எம் இனத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது. இதை ஒருபோதும் நீங்கள் மறந்துவிடலாகாது.

உங்களின் கற்றல் செயற்பாடு முக்கியமானது. முதன்மையானது. அது எங்கள் இனத்தின் எதிர்காலத்துடன் மட்டுமல்ல, உங்கள் எதிர்கால வாழ்வியலுடனும் சம்பந்தப்பட்டது.

எனவே நாங்கள் கிரிக்கெட் விளையாடுவோம். அதனை நயக்கத்தக்க நாகரிகத்துடன் கண்டு களிப்போம்.

அதேநேரம் எங்கள் இனம் இருக்கக்கூடிய சமகாலநிலை குறித்து நாம் அறியாதவர்களாக இருப்பது அபத்தமானதாகும்.

ஒரு காலத்தில் படையினர் கிரிக்கெட் விளையாட்டை தொலைக்காட்சியில் கண்டுகளிப்பர். அந்த நேரத்தில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துவர். தாக்குதலின் முடிவில் அரசு ஆய்வு நடத்தும்.

கிரிக்கெட் விளையாட்டை படையினர் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தமையினால்தான் பேரிழப்பு ஏற்பட்டதாக ஆய்வு முடிபு வெளிவரும். ஆய்வின் முடிபு படையினரை தெளிவுபடுத்தியது.

ஆனால், இப்போது நாங்கள் கிரிக்கெட்டில் மூழ்கி, உலகை, ஊரை, உறவை மறந்து அதில் திளைத்து திளைத்தேற முடியாமல் தவிக்கின்றோம்.

அன்புக்கினிய மாணவர்களே !அறிவியல் உலகில் வாழும் நாம் அதனோடு போட்டியிட எங்களை தயார்படுத்த வேண்டும். அதற்கான ஒரேவழி கல்வி கற்றலாகும். அது உங்களால் முடியும். நீங்கள் சாதிக்கப் பிறந்தவர்கள் என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

# ஆணைக்குழு முன் சாட்சியமளிப்பதற்கு முக்கிய அரசியல் பிரமுகர்களுக்கு ஆர்வமில்லை

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் முக்கிய அரசியல் பிரமுகர்கள் சிலர் சாட்சியமளிப்பதற்கு ஆர்வம் காட்டவில்லை என ஆணைக்குழுவின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரின் சாட்சியங்களை பதிவு செய்ய நல்லிணக்க ஆணைக்குழு எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும் இவர்கள் எவரும் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்காக உரிய பதில்களை இன்னும் வழங்கவில்லை எனவும் இவர்கள் சாட்சியமளிக்க தயார் என்றால் அவர்களுக்காக ஆணைக்குழு நேரம் ஒதுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நல்லிணக்க ஆணைக்குழு உறுப்பினர்கள் இறுதி அறிக்கை தயாரிப்பதற்காக பொதுமக்களால் அளிக்கப்பட்ட சாட்சியங்களை மீளாய்வு செய்துகொண்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## புனர்வாழ்வு முகாமில் இருந்தவர் கிணற்றில் பாய்ந்து தற்கொலை

(வவுனியா)

வவுனியா நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரி புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்றுவந்த இளைஞன் ஒருவர் கிணற்றில் பாய்ந்து மரணமடைந்துள்ளார்.

முழங்காவிலைச் சேர்ந்த ஆசீர்வாதம் நியூஸ்டன் என்ற 27 வயதுடைய இளைஞனே கிணற்றில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுத் திங்கட்கிழமை காலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று பார்வையிட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் இறந்தவரின் சடலத்தை வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி மருத்துவ பரிசோதனை நடத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டதையடுத்து, வவுனியா சட்ட வைத்திய அதிகாரியினால் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

இறந்தவரின் தாயாராகிய ஆசீர்வாதம் மரியமார் கிரட் மரண விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் எனது உறவினர் ஒருவர் நெளுக்குளம் முகாமுக்கு வந்திருந்தபோது, என்னுடைய மகன் கிணற்றில் விழுந்து இறந்துள்ளதாக அறிந்து எனக்கு தகவல் தெரிவித்தார். அதனையடுத்து நான் வவுனியாவுக்கு வந்தபோது மகனுடைய சடலத்தை வவுனியா வைத்தியசாலையில் பார்த்தேன் எனத் தெரிவித்துள்ளார். (ந-5)

## சுற்றுலா வந்த சுவீடன் பெண் இலங்கையில் காணாமல் போயுள்ளார்

(கொழும்பு)

சுவீடன் நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் இலங்கையில் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

28 வயதான மேரி ஜோன்ஸன் சிலேன் எனும் இப் பெண் சுவீடனின் மத்திய பகுதியான வெஸ்டர் கொட்லண்டின் வார்கார்டா நகரை சேர்ந்தவர்.

விடுமுறையை கழிப்பதற்காக இலங்கைக்கு வந்த அவர்,மார்ச் முற்பகுதியில் காணாமல் போனதாக தெரிவிக்கப்படுகிறது.தான் தாக்கப்பட்டதாகவும் தன்னிடம் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் இவர் கடந்த 5-ம் திகதி பேஸ்புக் இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார். தான் கடத்தப்படலாம் என அஞ்சுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

கடந்த திங்களன்று இவர் சுவீடனுக்கு திரும்பவிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் பின்னர் அவர் காணாமல்போனதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் காணாமல் போனமை குறித்து கடந்த 16ஆம் திகதி இன்டர்போல் அறிவித்துள்ளது. அத்துடன் சவீடன் பொலிஸார், வெளிவிவகார அமைச்சு ;புதுடில்லியிலுள்ள சுவீடன் தூதரகம் என்பன இவரை தேடி வருகின்றன. (ந-5)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே ஆகிவிடுகிறாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆகிவிடுவாய்.

பலவீனத்திற்கான பரிகாரம், ஓயாது பலவீனத்தைக் குறித்து சிந்திப்பதல்ல. மாறாக வலிமையைக் குறித்து சிந்திப்பதுதான். மக்களுக்கு ஏற்கனவே அவர்களுக்குள் இருந்துவரும் வலிமையைப் பற்றிப் போதிப்பாயாக. மிகப்பெரிய உண்மை இது--வலிமை தான் வாழ்வு: பலவீனமே மரணம். 'இவனை நம்பு' அல்லது 'அவனை நம்பு' என்று மற்றவர்கள் சொல்கிறார்கள். ஆனால், நான் சொல்கிறேன்--முதலில் உன்னிடத்திலேயே நீ நம்பிக்கை வை. அது தான் வழி. உன்னிடத்தில் நீ நம்பிக்கை வை. எல்லா ஆற்றல்களும் உன்னுள்ளேயே உள்ளன. அதை உணர்ந்து அந்த ஆற்றலை வெளிப்படுத்து. 'நான் எதையும் சாதிக்க வல்லவன்' என்று சொல். நீ உறுதியுடன் விஷத்தை பொருட்படுத்தாதிருந்தால் பாம்பின் விஷமும் உன் முன் சக்தியற்றதே. ஒருமுகப்படுத்தும் ஆற்றல் வளரவளர அதிகளவில் அறிவைப் பெறலாம். இந்த வழிதான் அறிவைப் பெறுவதற்குரிய ஒரேவழி.

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

### நாம் எங்கள் சொல்லுக்கும் வாழ்வுக்கும் இடைவெளி இல்லாதபடி வாழ்வோம்(மத்தேயு23:1-12)

இன்றைய உலகில் நமக்கும் சரியான வழிகாட்டிகள் தேவைப்படுகின்றனர். மலிந்து கிடக்கும் முறைகேடுகள் நிறைந்த சமுதாயத்தில் நமக்கு வழிகாட்ட நல்ல ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். இயேசு தனது காலத்து ஆன்மீகத் தலைவர்களைப் பற்றி மிகத் தெளிவான பார்வை வைத்திருக்கிறார். அவர்களின் முரண்பாடான வாழ்வை இயேசு கண்டித்தார்.

ஆனால், அதேவேளையில் அவர்களின் தலைமையை அவர் மறுக்கவில்லை. எனவேதான் இயேசு கூறுகின்றார்: அவர்கள் என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள். ஆனால், அவர்கள் செய்வதுபோல நீங்கள் செய்யாதீர்கள்.

ஒரேநேரத்தில் இயேசுவின் தீர்ப்பும், பரிந்துரையும் இதில் அடங்கியுள்ளன. பரிசேயர்களும், மக்கள் தலைவர்களும் முரண்பாடான வாழ்க்கை வாழ்தார்கள். அதை இயேசு புறக்கணிக்கிறார். அதேவேளையில், தம்முடைய சீடர்கள் மக்களுக்கு எடுத்துக்காட்டாக, முன்மாதிரியாக, முரண்பாடற்றவர்களாக விளங்க வேண்டும் என்றும் மறைமுகமாக அறிவுறுத்துகின்றார்.

நம்முடைய வாழ்வையும் இந்தப் பார்வையில் சிறிது ஆய்வு செய்தால் நல்லது. யாராவது நம்மைப் பற்றி மற்றவர்களிடம் இந்த அறிவுரையைக் கொடுத்தால் நமக்கு எப்படி இருக்கும்? நம்முடைய வாழ்வும் பிறருக்கு எடுத்துக்காட்டானதாக இருக்க வேண்டுமே ஒழிய எதிர் சாட்சியாக இருக்கக் கூடாது.

நல்ல தலைவர்கள் சொன்னதைச் செய்கிறார்கள், செய்வதைப் பிறருக்கு அறிவிக்கிறார்கள். நாம் எப்படி, நாங்கள் எங்கள் சொல்லுக்கும், வாழ்வுக்கும் இடைவெளி இல்லாதபடி வாழ வேண்டும். நம் வாழ்வைப் பற்றி, நம் நடத்தையைப் பற்றி கவனமாய் இருப்போம். முடிந்தால் இவரைப் போல வாழுங்கள் என்று பிறர் நம்மைப் பற்றி சொல்லும் வண்ணம் நடப்போம். முடியாவிட்டால் இவர் செய்வது போல் செய்யாதீர்கள் என்று பிறர் சொல்லாத வண்ணமாவது நடக்க அக்கறை கொள்வோம். இத்தவக்காலத்தில் கிறிஸ்து காட்டிய வழியில் வாழ முற்படுவோம்.

ம. பிரான்சிஸ், கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011


பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## ஓய்வு முடிவை வாபஸ் பெற அணித்தலைவர் சிமித் மறுப்பு

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு பின், சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறும் முடிவில் மாற்றமில்லை என தென்னாபிரிக்க அணித் தலைவர் சிமித் தெரிவித்துள்ளார்.

கடந்த 2003இல் தென்னாபிரிக்க அணியின் அடுத்தடுத்த தோல்விகளை அடுத்து, அப்போதைய அணித்தலைவர் பொலக்கை பதவி விலக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்தது.



ஆனால் பொலக் மறுக்கவே, 22 வயதான இளம் சிமித்திடம் அதிரடியாக அணித்தலைவர் பதவியை கொடுத்தது.

இதுவரை 146 போட்டிகளில் அணித் தலைவராக பணியாற்றிய பெருமை பெற்ற சிமித் இந்த உலகக் கிண்ணத் தொடருடன் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக ஏற்கனவே அறிவித்தார். இருபது-20 அணித் தலைவர் பொறுப்பையும் ஜேகான் போத்தாவுக்கு விட்டுக்கொடுத்தார்.

இந்நிலையில் ஓய்வு முடிபு குறித்து சிமித் கூறியதாவது, எனது ஓய்வு முடிபில் எந்த மாற்றமும் இல்லை. எனது பதவி காலத்தில் நிறைய ஏற்ற, இறக்கங்களை சந்தித்துள்ளேன். இவற்றை எளிதாக சமாளித்து, விரைவான வளர்ச்சி கண்டேன். தவிர அணித் தேர்வில் அரசியல் தலையீடு, பல்வேறு விமர்சனங்களை எதிர் கொண்டுள்ளேன்.

கடந்த 2008இல் இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கு எதிராக பெற்ற வெற்றிகளை மறக்க முடியாது. இது உலகக் கிண்ண தொடர் என்பதால் தான், இந்த போட்டிகளில் பங்கேற்க முடிபெடுத்தேன். மற்றபடி, சரியான நேரத்தில்தான் இந்த முடிபை எடுத்துள்ளதாக நினைக்கிறேன். இது தெளிவான மனநிலையில் நீண்ட நாட்களுக்கு முன்பே எடுத்தது.

அணித்தலைவர் பதவியில் சிறப்பாக செயல்பட்டு இருந்தாலும், இதுவரை அணிக்காக துடுப்பாட்டத்தில் பெரிய அளவில் சோபிக்காதது ஏமாற்றமாகவே உள்ளது. இருப்பினும், அணிக்கு என்ன தேவையோ, அவற்றை வழங்கியுள்ளதாக நம்புகிறேன். இவ்வாறு சிமித் கூறினார்.

## துளித்துளியாய்...

### அப்பாவுக்கு அர்ப்பணம்

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர் தேவேந்திர பிஷோ தனது தந்தையின் ஆசையை நிறைவேற்றி விட்டார். பிஷோவுக்கு 17 வயது இருக்கும் போது தந்தை இறந்துவிட்டார். அப்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியில் மகன் விளையாட வேண்டுமென விரும்பினார். தற்போது அந்த கனவு நிறைவேறி உலகக் கிண்ணத் தொடரில் விளையாடியதை தந்தைக்கு அர்ப்பணிப்பதாக கூறியுள்ளார்.

### மன்னிப்பு கேட்டார் சகிப்

உலகக் கிண்ண காலிறுதியில் நுழைய முடியாமல் பங்களாதேஷ் வெளியேறியது. இதற்காக ரசிகர்களிடம் சகிப் மன்னிப்பு கேட்டார். கடந்த ஒரு வருடமாக கடினமாக உழைத்தும் காலிறுதிக்குள் நுழைய முடியாதது துரதிர்ஷ்டவசமானது என அவர் தெரிவித்துள்ளார்.

### காந்தி அல்ல... துப்பாக்கி

சிம்பாவேக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கு முன்பு கென்யா அணித் தலைவர் காமன்டே கூறும்போது,

டிக்காலோவை நாங்கள் துப்பாக்கி என்று தான் அழைப்போம் என தெரிவித்தார். ஆனால் காந்தி என தவறுதலாக பத்திரிகைகளில் வெளிவந்ததாக விளக்கம் அளித்துள்ளார்.

### காலிறுதியில் விக்டோரி

காலில் ஏற்பட்ட காயத்தால் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் நியூசிலாந்து அணித்தலைவர் விக்டோரி விளையாடவில்லை. அதே சமயம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான காலிறுதி போட்டியில் விளையாட முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

### அரையிறுதியில் இந்தியா -பாக் மோதல்?

நாளை மேற்கிந்தியத்தீவுகள் அணியை பாகிஸ்தான் வீழ்த்தி, நாளை மறுதினம் ஆஸி.யை இந்தியா வீழ்த்தி அரையிறுதிக்கு இரு அணிகளும் நுழைந்தால் மொகாலியில் இரு அணிகளும் மோதக்கூடிய வாய்ப்பு உருவாகி உள்ளது. மார்ச் 30இல் இந்த போட்டி [illegible] றும்.

## லீக் சுற்று வரை...

### அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையை அடித்த அணிகள்

| அணி | மொத்தம் | எதிரணி |
|---|---|---|
| இந்தியா | 370/4 | பங்களாதேஷ் |
| நியூசிலாந்து | 358/6 | கனடா |
| தென்னாபிரிக்கா | 351/5 | நெதர்லாந்து |
| இந்தியா | 338 | இங்கிலாந்து |
| இங்கிலாந்து | 338/8 | இந்தியா |



### அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள்

| வீரர் | அணி | ஓட்டங்கள் | அதிகம் | சதம் | அரைச் சதம் |
|---|---|---|---|---|---|
| சங்கக்கார | இலங்கை | 363 | 111 | 1 | 2 |
| திரோட் | இங்கிலாந்து | 336 | 92 | 0 | 4 |
| ஸ்ரொரஸ் | இங்கிலாந்து | 329 | 158 | 1 | 1 |
| சேவாக் | இந்தியா | 327 | 175 | 1 | 1 |
| டெண்டுல்கர் | இந்தியா | 326 | 120 | 2 | 0 |
| டிவில்லியர்ஸ் | தென்னாபிரிக்கா | 318 | 134 | 2 | 1 |

### அதிக விக்கெட்டுக்களைச் சாய்த்தவர்கள்

| வீரர் | அணி | விக்கெட்டுக்கள் | அதிகபட்சம் |
|---|---|---|---|
| அப்ரிடி | பாகிஸ்தான் | 17 | 5/16 |
| சகீர்கான் | இந்தியா | 15 | 3/20 |
| பீற்றர்சன் | தென்னாபிரிக்கா | 14 | 4/12 |
| சௌத்தி | நியூசிலாந்து | 14 | 3/13 |

### சிறந்த பந்துவீச்சு

| வீரர் | அணி | ஓவர் | விக்கெட்/ஓட்டம் | எதிரணி |
|---|---|---|---|---|
| ரோச் | மேற்கிந்தியதீவுகள் | 8.3 | 6/27 | நெதர்லாந்து |
| மலிங்க | இலங்கை | 7.4 | 6/38 | கென்யா |
| அப்ரிடி | பாகிஸ்தான் | 8.0 | 5/16 | கென்யா |
| அப்ரிடி | பாகிஸ்தான் | 10.0 | 5/23 | கனடா |
| யுவராஜ் | இந்தியா | 10.0 | 5/31 | அயர்லாந்து |

### ஹட்ரிக் விக்கெட் சாதனை

| வீரர் | அணி | எதிரணி | விக்கெட் |
|---|---|---|---|
| ரோச் | மேற்கிந்தியத்தீவுகள் | நெதர்லாந்து | 6/27 |
| மலிங்க | இலங்கை | கென்யா | 6/38 |

### ஆட்டநாயகன் ஒன்றுக்குமேல்

| வீரர் | அணி | போட்டி | விருது |
|---|---|---|---|
| யுவராஜ் சிங் | இந்தியா | 6 | 3 |
| டிவில்லியர்ஸ் | தென்னாபிரிக்கா | 4 | 2 |
| ரோச் | மேற்கிந்தியத்தீவுகள் | 5 | 2 |
| உமர் அக்மல் | பாகிஸ்தான் | 5 | 2 |
| அப்ரிடி | பாகிஸ்தான் | 6 | 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாலிங்கம் வெற்றி கிண்ணத்தை கொக்குவில் இந்து சுவீகரித்தது



(கொக்குவில்)

இராகுலனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட ஒருநாள் போட்டியிலும் வெற்றி பெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரி அணி சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் இடையிலான சபாலிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இராகுலன், ஆதித்தனின் அபார ஆட்டத்தின் மூலம் 49 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 306 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் கே.இராகுலன் 72 பந்துகளில் (10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 86 ஓட்டங்களையும் எல்.ஆதித்தன் 26 பந்துகளில் (2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 43 ஓட்டங்களையும். எஸ்.சாம்பவன் ஆட்டமிழக்காமல் 17 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 32 ஓட்டங்களையும் எஸ்.உத்தமகுமரன் 28, பி.பங்குஜன் 26, கே.திவாகர் 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வி.ஜஸ்மினன் 4 விக்கெட்டுக்களையும் வி.வாமணன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 307 ஓட்டங்கள் என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணிக்கு ஆர்.நிருஜன் துணிச்சலாகப் போராடினார்.

எனினும் யாழ்.இந்துக்கல்லூரி அணி 46 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 218 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது.

இதன் மூலம் 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரி அணி சபாலிங்கம் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது.


துடுப்பாட்டத்தில் யாழ்.இந்துக்கல்லூரி அணி சார்பாக ஆர்.நிருஜன் 8[illegible] பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 88 ஓட்டங்களையும் அணித்தலைவர் எஸ்.செந்தூரன் 31, ஜே.சஜீகன் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக என்.கார்த்திக் 7 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 16 ஓட்டங்களைக்கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் கே.இராகுலன், 2 விக்கெட்டுக்களையும் பி.பங்குஜன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வெற்றிக்கு சகலதுறையிலும் ஜொலித்த கே.இராகுலன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

அத்துடன் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்.இந்துக்கல்லூரி அணியின் ஆர்.நிருஜனும் சிறந்த பந்துவீச்சாளராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் என்.கார்த்திக்கும் தெரிவானார்கள்.

இதேவேளை கடந்தவாரம் இரு கல்லூரிகளுக்குமிடையில் நடைபெற்ற இன்னிங்ஸ் கிரிக்கெட்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிவெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.









படங்கள்:-எஸ்.கரன்

## ஆஸி அணியை வீழ்த்துவோம் இந்[illegible]ய வீரர் யுவராஜ் நம்பிக்கை

(சென்னை)

கா[illegible]யில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்[illegible]க வாய்ப்புள்ளது என இந்திய வீரர் யுவர[illegible]சிங் தெரிவித்துள்ளார். 10ஆவது உல[illegible]க்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியத் துணைக் கண்டத்தில் நடக்கிறது. லீக் சுற்று முடிந்த நிலையில் நாளை மறுதினம் அகமதாபாத்தில் நடக்கவுள்ள லீக் போட்டியில் இந்திய அணி நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியாவுடன் மோதுகிறது.

உலகக்கிண்ண அரங்கில் இந்தியா–அவுஸ்திரேலிய அணிகள் 9 முறை மோதியுள்ளன. இதில் அவுஸ்திரேலியா 7, இந்தியா 2 போட்டியில் வெற்றிகண்டன.

கடந்த 2003இல் நடந்த இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி கங்குலி தலைமையிலான இந்தியாவை வீழ்த்தி சம்பியனானது.

இருப்பினும் சமீபத்தில் பெங்களூரில் நடந்த பயிற்சிப் போட்டியில் இந்தியாவிடம் அவுஸ்திரேலியா தோல்வி அடைந்தது. இது குறித்து இந்திய சகலதுறை வீரர் யுவராஜ் சிங் கூறியதாவது,

லீக் சுற்றில் இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் தலா 4 வெற்றியை பதிவு செய்தன. எனவே காலிறுதிப் போட்டியில் முழுத் திறமையை வெளிப்படுத்தும் அணிக்கு வெற்றிவாய்ப்பு அதிகம். ஒருநாள் போட்டிக்கான தரவரிசையில் அவுஸ்திரேலிய அணி நம்பர்-1 இடத்தில் உள்ளது.

கடந்த 3 உலகக்கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலிய அணி சம்பியனானது. இதனை மறுக்க முடியாது. ஆனால் அப்போது மெக்ராத், வோர்ன்,கில்கிறிஸ்ட் உள்ளிட்ட ஜாம்பவான்கள் அணியில் இடம்பெற்றிருந்தனர்.தவிர அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங், போர்மின்றி தவித்து வருவது இந்தியாவின் வெற்றிக்கு கூடுதல் நம்பிக்கை அளித்துள்ளது.

எனவே காலிறுதியில் அவுஸ்திரேலிய அணியின் பலவீனத்திற்கேற்ப திட்டமிட்டு வெற்றி பெற முயற்சிப்போம்.

சோட்பிச் பந்துகளில் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் திணறிவருகின்றனர் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படி திணறியிருந்தால் டெஸ்ட் தரவரிசையில் நம்பர்-1 ஒருநாள் போட்டி தரவரிசையில் நம்பர்-2 இடத்தை அடைந்திருக்க முடியாது.

அவுஸ்திரேலிய அணியில் திறமையான வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். இவர்கள் எளிதில் விக்கெட் வீழ்த்தக்கூடிய திறமை படைத்தவர்கள். இதற்கேற்ப பயிற்சி மேற்கொண்டு இவர்களது பந்துவீச்சை எளிதாக சமாளிப்போம்.

இந்திய அணி உலகக்கிண்ணத்தை வெல்லவேண்டும் என்பது இந்தியர்களின் கனவு. எனவே அவுஸ்திரேலியா, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட முன்னணி அணிகளை வீழ்த்தி உலகக் கிண்ணத்தை வெல்வதை பெருமையாக கருதுகிறேன்.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக சதம் கடந்து எழுச்சி கண்டது மகிழ்ச்சி அளிக்கிறது. இப் போட்டியில் எனது திறமையை நிரூப்பிக்க வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கினேன். முழுத்திறமையை வெளிப்படுத்தி சதம்கடந்து வெற்றிக்கு வித்திட்டேன் இந்த போர்ம் அடுத்து வரவுள்ள காலிறுதி உள்ளிட்ட நொக் அவுட் சுற்றில் தொடர விரும்புகிறேன் இவ்வாறு யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

## 'மறக்க முடியாத விக்கெட்' ராம்போல் மகிழ்ச்சி

(சென்னை)

உலகக்கிண்ண கிரிக்கெட்டில் சச்சினை வீழ்த்தியது எனது கிரிக்கெட் வாழ்க்கையில் என்றுமே மறக்கமுடியாத நிகழ்வு என மேற்கிந்தியத் தீவுகள் வீரர் ராம்போல் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தியது.

இதில் சச்சின் 02 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ராம்போலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இது குறித்து ராம்போல் (26) கூறியதாவது,

இந்தியாவுக்கு எதிரான உலகக் கிண்ணப் போட்டி எனது வாழ்க்கையில் பெரிய விடயம். இதில் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் சச்சினின் விக்கெட்டை வீழ்த்துவது என்பது அதிலும் பெரிய விடயம். வாழ்க்கையில் இது கனவு போலவிருந்தது.

பந்தை விக்கெட் காப்பாளர் பிடித்ததும் சச்சின் நடுவரின் தீர்ப்புப்பாக காத்திருக்காமல் வெளியேற ஆரம்பித்தார். இதுதான் எனது வாழ்வில் மிகச் சிறந்த பந்துவீச்சு. இதை எப் படிக் கொண்டாடுவது என்று இன்னும் முடிபு செய்யவில்லை.

முக்கியமான நேரத்தில் மிகப்பெரிய ரசிகர் கூட்டத்தின்முன்பு விளையாடுவதை மிகவும் எதிர்பார்த்தேன். இதில் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி என்னால் முடிந்தளவு திறமையை வெளிப்படுத்தியது மகிழ்ச்சியாக வுள்ளது. இவ்வாறு ராம்போல் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொடர்பில் இந்தியாவின்...

செயலாளர் அனுபம் ராய் கூறியுள்ளதாகவும் இத் தகவற்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் விவகாரத்தில் இந்தியா மீண்டும் தலையிடுவதற்கான நேரம் வருவதாக அனுபம் ராய் கூறியிருந்தார். அதேவேளை மத்தியஸ்தராகவோ, அனுசரணையாளராகவோ விளங்குவதற்கு இந்தியா விரும்பவில்லை எனவும் நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பியஒன்றியம்ஆகிய இணைத் தலைமைகள் குழுவிலும் இந்தியா இணைந்துகொள்ளமாட்டாது என அனுபம் ராய் தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

2003 ஆம் ஆண்டு டோக்கியோவில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள் மாநாட்டிற்கு இணைத்தலைமை நாடுகளே தலைமை வகித்தபோதிலும் இந்த உதவி வழங்கும் நாடுகளின் குழுவில் அதிகளவில் பங்களிப்பு வழங்க இந்தியா விரும்பியதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் இணை செயலாளர் மோகன்குமார் ஒரு விடயத்தைக் கூறியிருந்தார்.

அதாவது இலங்கையின் சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதம் அடைந்திருப்பதுடன் அது மேலும் பின்னடைவைக் காணும் தன்மையைக் கொண்டிருக்கின்ற காரணத்தால் இந்திய அரசாங்கம் இனிமேலும் அமைதியாக இருக்கமுடியாது என்பதே அதுவாகும்.

2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட தகவல் குறிப்பில் இவ்விவகாரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் தனது நலன்களைப் பாதுகாப்பதற்கான சிறந்த வழிகளை இப்போதும் இந்தியா ஆராய்ந்து கொண்டிருப்பதாக மோகன்குமார் கூறியிருந்தார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும். நோர்வேயைத் திரும்பக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். சிங்கள மக்களின் கருத்தொற்றுமைப்பாட்டை பெற்றுக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்தியா, மகிந்த ராஜபக்ஷவுக்கு தெரிவிக்கத் தயாராகவிருந்ததாக மோகன்குமாரின் கருத்தை மேற்கோள்காட்டி இத் தகவற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

அதேவேளை இந்தியா அனுசரணையாளராகச் செயற்படவேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகள் விரும்புவதாக இந்தியாவுக்கு நோர்வே அறிவித்திருந்தது. ஆனால் அதற்கு இந்திய அரசாங்கம் மறுத்துவிட்டது. இதனை இந்திய அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டாது என மோகன்குமார் உறுதியாகத் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா அனுசரணை வழங்கினால் பிரபாகரன் சந்திப்புகளுக்கு வலியுறுத்துவார் எனவும் அதன் மூலம் இந்திய அரசாங்கத்தினால் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கப்பட்டதை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் எனவும், இவ் விடயமானது தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகள் காலூன்ற சந்தர்ப்பங்களை ஏற்படுத்துக் கொடுக்கும் எனவும் மோகன்குமார் தெரிவித்திருக்கின்றார்.

அத்துடன் தமிழ்நாட்டிலுள்ள பிரதான அரசியல் கட்சிகளை தமிழீழ விடுதலைப்புலிகள் சந்தித்து ஆதரவைத் திரட்டுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் இலங்கையில் சமாதான முயற்சிகளில் இந்தியாவை தீவிரமாகச் சம்பந்தப்படுத்தும் நோக்கத்தை அடைவதில் இலங்கை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட மகிந்த ராஜபக்ஷ தனது முதலாவது இந்திய விஜயத்தின் போது தவறிவிட்டார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டைகளைத் தடுக்க தனது பங்களிப்பு உதவும் என்ற எண்ணத்தை இந்தியா கொண்டிருப்பதாகவும் அச்சமயம் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் நவம்பர் மாத பிற்பகுதியில் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா அதிகளவுக்கு பங்களிப்பு வழங்கமாட்டாது எனவும், சிங்கள மக்களின் கருத்தொருமைப்பாடு இல்லாமல் இந்தியா பங்களிப்பை வழங்காது என்றும் அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவுக்கு கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் நெருக்கடியான தருணத்தில் இந்தியாவும் இழுபட்டுச் செல்வதற்கு இது பொருத்தமான காலம் அல்ல என இந்தியாவின் அப்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் கருதியதாகவும் தூதுவர் ரொபேட் ஓ பிளேக் கூறியிருந்தார் என த ஹிந்து பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## பெற்றோ...

களை முன்னிறுத்தி இந்த விலை அதிகரிப்புத் தீர்மானத்தை அரசாங்கம் பிற்போட்டிருந்தது.

இந்நிலையில் சர்வதேச சந்தையின் விலை அதிகரிப்பை வைத்து எதிர்வரும் வாரங்களில் இலங்கையில் பெற்றோலிய விலைகளை அதிகரிக்க அரசாங்கம் கலந்தாலோசித்து வருவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## புலிகளுக்கு...

புதிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூன்று முகாம்கள் தமிழ்நாட்டில் காணப்படுவதாக பிரதமர் டி.எம். ஜயரட்ண அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதற்கு முன்னர் இந்திய புலனாய்வு அதிகாரிகளிடம் ஆலோசனை செய்து கருத்து வெளியிட்டிருக்கவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (ந-5)

## எரிந்தநிலை...

பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ந-5)

## பார்வதி அம்மா...

சென்னையில் வங்கக்கடல் அலைகளில் மலர்களைத் தூவி நீர்க்கடன் ஆற்றும் நிகழ்ச்சி, பழ. நெடுமாறன் தலைமையில் நடை பெறவிருக்கிறது.

பிரபாகரனை தன் மணிவயிற்றில் சுமந்த அன்னை பார்வதி அம்மையாரின் ஈமச் சாம்பல் ஈழத்திலிருந்து வந்து சேர்ந்திருக்கிறது. அதனை வங்கக் கடலில் தூவிவிட இருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார். (ந-5)

# முதலாவது நிலக்கரி மின்நிலையம் ஜனாதிபதி இன்று திறந்து வைப்பு

(கொழும்பு)

இலங்கையில் முதலாவது நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தை ஜனாதிபதி மகிந்த நுரைச்சோலையில் இன்று திறந்து வைக்கவுள்ளார்.

இலங்கையில் மொத்த மின்சாரத் தேவையில் 17 சதவீதத்தை அதாவது 300 மெகாவோட் மின்சாரத்தை இந்த மின் நிலையம் இன்றுமுதல் உற்பத்திசெய்யும். இதன் இரண்டாம் கட்ட உற்பத்தி ஆரம்பிக்கப்படும்போது மேலும் 600 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சீனாவின் உதவித் திட்டத்தின் கீழ் இந்த நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணிகள் கடந்த 2007ஆம் ஆண்டு யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்திற்கு சீனா 450 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் இலங்கை 300 மில்லியன் ரூபாயையும் ஒதுக்கியுள்ளன. (ந-5)

## மன்னாரில் கடல் கொந்தளிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளில் கடல் நீரின் மட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது. அத்துடன் கடும் காற்று மற்றும் அலை வீசுகின்றமையால் நேற்று கடற்றொழிலுக்கு சென்ற மீனவர்கள் உடன் கரை திரும்பியுள்ளனர்.

குறிப்பாக மன்னார், பேசாலை, நடுக்குடா கடற்பரப்பு மற்றும் தலைமன்னார் பழைய பாலத்தடி கடற்பரப்பு போன்ற கடற்கரை பகுதிகளில் கடல்நீர் உட்புகுந்துள்ளது.

இதனால் பழைய பாலத்தடியில் குடும்பமாக இருந்து மீன் பிடியில் ஈடுபடும் 40 தென் பகுதி மீனவ குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. (ந-5)

## அரசுக்கு மக்...

ஒருதடவை நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மக்களின் பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது எனவே அப் பிரதேசங்களில் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்காக கூட்டமைப்பு அரசாங்கத்துடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்த வேண்டும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## கடாபி இலக்கு...

ளதுடன், பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக கடாபி காணப்பட்டால் அவர்மீது தாக்குதல் நடத்துவது நியாயமானதுதான் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே லிபியாவில் ஜனநாயகம் குறைந்து போய்விட்டது என்பதற்காக அந்த நாட்டை தாக்க முடியாது என்று ரஷ்ய பிரதமர் புட்டின் கூறியுள்ளார்.

இதற்கிடையே லிபியாவுக்கு எதிரான மேற்கத்தைய நாடுகளின் நடவடிக்கைகள் குறித்து அரபு நாடுகளில் எவ்விதமான எதிர்ப்பும் இல்லாதமை ஒரு வியப்புக்குரிய விடயமாகப் பார்க்கப்படுகின்றது. அதேவேளை லிபிய அகதிகள் சுமார் 200 பேரைத் தாங்கிய படகு ஒன்று சிசிலியைச் சென்றடைந்திருப்பதாக இத்தாலி கூறியுள்ளது. (ந-5)


பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்
நடத்தும்
3 மாதகால பத்திரிகை இயல்
சான்றிதழ் கற்கை நெறி

தேர்வுக் கற்கை நெறி
26, 27 மார்ச் 2011
(சனி ஞாயிறு)

- புதுமுக பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக வியல் மாணவர்களுக்கானது.
- துறைசார் ஊடகவியலாளர்களின் துணை யுடன் நடத்தப்படும்.
- தேர்வுக் கற்கை நெறியின் பின்னர் தெரிவு கள் இடம்பெறும்.
- பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.

Bishops Savundram Media Centre
No. 891, Hospital Road Jaffna.
021 222 6085, 0777165147



MATHS CENTRE
M.M.V. Road, NELLIADY
கலை/ வர்த்தக வகுப்புக்கள்
A/L 2013 பிரிவு II
ஆரம்பம்: 23.03.2011 (புதன்கிழமை)
வழமையான ஆசிரியர் குழு
நேரம்:- காலை 7.00 மணி
(சி-2768)




UK Visa எடுப்பதில் சிக்கலா?
பணம் இல்லையே என்று கவலையா?
IELTS தேவையே என்று அஞ்சுகிறீர்களா?
கவலையை விடுங்கள்!
மிகக் குறைந்த செலவில் – IELTS இல்லாமலே
UK செல்ல அரிய வாய்ப்பு!
மலேசியாவில் UK பட்டக்கல்வியைப் பெற்று
அங்கிருந்து இலகுவாக UK செல்லுங்கள்
இது எப்படிச் சாத்தியம்?
மலேசிய அரசாங்கத்தினதும், 10க்கும் மேற்பட்ட UK, Canada பல்கலைக்கழகங்களினதும் அங்கீகாரம் பெற்ற
Legenda
Education Group

பிரதிநிதி சஜீப் உடனான
இலவச கலந்துரையாடலுக்கு வாருங்கள்
இன்று செவ்வாய்கிழமை
காலை 10மணி:
சிகரம் ஊடக இல்லம்,
இல.221, பலாலி வீதி,
கந்தர்மடம்
பிற்பகல் 2மணி:
தியாகி அறக்கொடை நிலைய மண்டபம்,
இல.527, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
0773 616 798, 021 300 80 60



கணக்கீட்டுப் புதிய நூல் விரைவில்
வெளிவரவுள்ளது...
கணக்கீடு- பல் தேர்வு வினாக்கள்
(புதிய பாடத்திட்டத்திற்கானது)
விலை 1500/=
By- S.S. சிவதாஸ் (BBA)
(சி-2770)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org